விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 251 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 10 திங்கட்கிழமை (26.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
- சகல நாடுகளுக்குமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை.
- உணவுப் பொருட்கள், மருந்து வகைகள், எண்ணெய் வகைகள், கருவாடு என்பன எம்மூடாக அனுப்பிட முடியும்.
- கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S Road, Jaffna
208, Galle Road, Colombo - 06
077 755 4528
(286)

## மனைவியின் இழப்பைத் தாங்க முடியாத
## சிந்துஜாவின் கணவர் விபரீத முடிவெடுத்து மரணம்



(மன்னார்)

மன்னார் வைத்தியசாலையில் அண்மையில் உயிரிழந்த இளம் தாய் சிந்துஜாவின் கணவர் மரிய ராஜ் (வயது-26 ) அவரது சொந்த ஊரான வவுனியா பனிக்கர் புளியங்குளத்தில் நேற்று முன்தினம் இரவு விபரீத முடிவெடுத்து மரண மடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மன்னார் வைத்திய 15

## 'சங்கு' காலத்தின் தேவை சிறீதரன் எம்.பி உரை



(கிளிநொச்சி)

சங்கு காலத்தின் தேவை என்பதை அனைவரும் தங்கள் மனதில் பதித்துக் கொள்ள வேண்டும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம் பெற்ற புலம்பெயர் எழுத்தாளர் வல்லிபுரம் 15

## வலுவடையும்...
## இலங்கை ரூபாய்

(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாய் 7.6 சதவீதத்தால் வலுவடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள வாராந்த குறிகாட்டிகள் அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்விலை 296 ரூபாய் 55 சதமாகவும், அதன் விற்பனை விலை 305 ரூபாயாகவும் கடந்த வெள்ளிக்கிழமை பதிவானது. (ந-7)

# ஐ.எம்.எப் உடன் விவாதிக்க சஜித், அநுர முன் வரவேண்டும்

## நாட்டை மீட்டெடுக்க எவரும் வராதபோது நான் முன்வந்தேன் - ரணில்



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடன் இணைய வழி மூலம் பகிரங்க விவாதம் நடத்த சஜித் பிரேமதாஸ மற்றும் அநுர குமார திஸாநாயக்க ஆகியோர் முன்வர வேண்டும். நாட்டை மீட்டெடுக்க எவரும் முன்வராதபோது நான் முன்வந்தேன். இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் பெண்ணிடம் ரூ.22 இலட்சம் மோசடி
### ஏறாவூர் நபர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்ணொருவரிடம் சுமார் 22 இலட்சம் ரூபாய் பண மோசடி செய்த நபரொருவரைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை 15

## தபால் வாக்குச்சீட்டுக்கள் இன்று விநியோகம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்குப் பதிவுகள் செப்ரெம்பர் 4ஆம், 5ஆம் மற்றும் 6 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

தபால் வாக்குச் சீட்டுக்களை இன்று தபால் நிலையங்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, வாக்காளர் அட்டை 15

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் மூன்றாம் தவணையின் முதலாம் கட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இரண்டாம் தவணை கடந்த ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதி நிறைவடைந்திருந்தது. (ந-7)

## வரி தொடர்பான சகல தகவல்களும் இன்று வெளியாகும்
### நிதி இராஜாங்க அமைச்சு

(கொழும்பு)

வரி தொடர்பான அனைத்துத் தகவல்களும் இன்று வெளியிடப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலா 15

## தேர்தல் விதிகளை மீறுகின்ற பதிவுகள் உடனடியாக நீக்கப்படும்
### சமூக ஊடக இயக்குநர்கள் ஆணைக்குழுவிடம் உறுதி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் காலப் பகுதியில் சமூக வலைத்தளங்களை முறைகேடாகப் பயன்படுத்தல், தேர்தல் விதிகளை மீறும் வகையிலான பதிவுகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் சமூக ஊடகங்களின் இயக்குநர்களுடன் தேர்தல்கள் ஆணைக்குழு கலந்துரையாடியுள்ளது.

இதன்போது பேஸ்புக், யூரியுப், டிக்ரொக் 15

## மது போதையில் லஞ்சம் கோரி
## சண்டித்தனம் புரிந்த கான்ஸ்டபிள் கைது

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் அரச உத்தியோகஸ்தர் ஒருவரைத் தாக்க முற்பட்ட குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் சமகால மனித உரிமை தொடர்பில்

# ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை காத்திரமாக உள்ளது

## பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கருத்து



இலங்கையின் சமகால மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை பரந்துபட்ட விடயங்களை உள்ளடக்கியிருப்பதாகத் திருப்தி வெளியிட்டிருக்கும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள 57 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் வலுவானதொரு புதிய தீர்மானத்தை நிறைவேற்றவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கையின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரத்தில் மிகமோசமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சமகாலப் போக்குகள் உள்ளடங்கலாக நாட்டின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கின் விரிவான அறிக்கை கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்டது.

அவ்வறிக்கையில் "தேர்தல்களின் பின்னர் புதிதாகத் தெரிவாகும் அரசாங்கம் யுத்தத்துக்கு அடிப்படையாக அமைந்த காரணிகளைக் களையக் கூடியவாறு, அனைவரையும் உள்ளடக்கிய தேசிய இலக்கை நடைமுறைப்படுத்த வேண்டும். அதுமாத்திரமன்றி ஜனநாயகத்தை வலுப்படுத்தக்கூடிய, அதிகாரப்பகிர்வை உறுதிப்படுத்தக்கூடிய, பொறுப்புக்கூறலையும் நல்லிணக்கத்தையும் மேம்படுத்தக்கூடிய வாறான கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களையும், அரசியலமைப்புத் திருத்தங்களையும் மேற்கொள்ள வேண்டும்" என வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி இப்புதிய அறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பில் தனது திருப்தியை வெளிப்படுத்திய இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், இவ்வறிக்கை மேலும் வலுவானதாக அமைந்திருக்கமுடியும் எனினும் இதில் பரந்துபட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பது திருப்தியளிக்கின்றது என்று குறிப்பிட்டார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தை உள்ளடக்கிய தீர்மானம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் முடிவுக்குவரும் நிலையில், அச்செயற்திட்டத்தின் கீழான பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு புதிய தீர்மானமொன்றை நிறைவேற்ற வேண்டியது அவசியம் எனச் சுட்டிக்காட்டினார்.

எனவே எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகவிருக்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடரில், இலங்கை தொடர்பில் வலுவானதொரு புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் அல்லது தற்போதைய தீர்மானம் வலுவான கூறுகளுடன் கால நீடிப்புச் செய்யப்படவேண்டும் எனவும் சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார். (ந-7)

# மக்களுக்கு என்ன தேவை என்பதை

## மக்களே முடிவெடுக்க வேண்டும்; கட்சிகள் அல்ல;

## எம்.கே சிவாஜிலிங்கம் விளாசல்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தி என்ன கோரிக்கையை முன்வைக்கப் போகிறோம் என்பதே முக்கியம் என பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்கு இது வரை தீர்வு இல்லை. அது இனியும் கிடைக்கப்போவதில்லை. எனவே தமிழ் மக்களாகிய நாம் இலங்கைக்குள் எமக்கு தீர்வு இல்லை என்பதனை சர்வதேச சமூகத்துக்குச் சொல்ல வேண்டும்.

நாங்கள் தேசியம் தாயகம் சுயநிர்ணய உரிமை பற்றி தந்தை செல்வா காலத்தில் இருந்து பேசிவருகிறோம்.

அதனால் தமிழ் மக்களுக்கு என்ன வேண்டும் என்பதனை தமிழ் மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். ஆனால் இன்று கட்சிகள் அதனை தீர்மானிக்க முயல்கின்றன. தமிழ் மக்களுக்கு என்ன தேவை என்பதனை பொது வாக்கெடுப்பு மூலமே அறியமுடியும்.

பொது வாக்கெடுப்பை நடத்த வேண்டியது சர்வதேச சமூகம். ஆனால் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் பொது வாக்கெடுப்பாக அமையாது. அதனைப் பயன்படுத்தி எமது கோரிக்கையை நாம் சர்வதேச சமூகத்திற்குத் தெரியப்படுத்தமுடியும்.

மக்கள் தமக்கு எது தேவை என்பதனை அவர்கள் தீர்மானிப்பார்கள். வாக்கெடுப்புக்கள் எதுவும் இல்லாமல், இது தான் இவர்களுக்குத் தேவை என கட்சிகள் முடிவெடுக்க முடியாது.

எனவே சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க வேண்டும். அவ்வாறான கோரிக்கை இல்லாமல் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதில் அர்த்தம் இல்லை.

கேட்க வேண்டியதைக் கேட்காது, ஒளித்து மறைத்து தமிழ்ப் பொது வேட்பாளர் செயற்படுவாராயின் நாம் கடுமையாக அதனை எதிர்ப்போம்.

தேர்தல் அறிக்கையில் இந்த விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். அதில் ஒளித்து மறைத்து விடயங்கள் சொல்லப்பட்டால் நாம் கட்சியை கூட்டி , என்ன முடிவெடுக்க வேண்டும் என தீர்மானிப்போம்.

தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் சவால் விடுகிறேன். சுய நிர்ணய உரிமை என்பதனை எப்படி பிரயோகிக்கப் போகிறீர்கள்? வாக்கெடுப்பு இல்லாமல் தமிழ் மக்கள் எதனை விரும்புகிறார்கள் என்பதனை நீங்கள் எப்படித் தீர்மானிப்பீர்கள்?

அவர்கள் ஏமாற்றிக் கொண்டே இருக்கிறார்கள். நாங்களும் தொடர்ந்து ஏமாந்து கொண்டு இருக்க முடியாது. ஏமாற்றங்கள் போதும் என்றார். (ந-7)

## மரண அறிவித்தல்

தோற்றம்
06 - 10 - 1946



மறைவு
25 - 08 - 2024

# கௌரி கனகசபை

(ஓய்வு நிலை தட்டெழுத்தாளர் – நல்லூர் பல.நோக்கு கூ.சங்கம்)

காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கனகசபை கண்மணி தம்பதியரின் மூத்த புதல்வியும், புவனாம்பிகை, வதனாம்பிகை, யோகாம்பிகை, மல்லிகா, சிவகுமார் மற்றும் காலஞ்சென்ற அம்பிகா ஆகியோரின் பாசமிகு சகோதரியுமான கௌரி கனகசபை அவர்கள் 25.08.2024 மாலை இயற்கை எய்தினார்.

இறுதிக்கிரியைகள் அவர்களது இல்லத்தில் இன்று (26.08.2024) திங்கட்கிழமை மதியம் 12.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிராமணப்புல இந்து மயானத்திற்கு (திருநெல்வேலி இந்து மயானம்) பி.ப 2.00-மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.35, நாவலடி வீதி, திருநெல்வேலி
மேற்கு, யாழ்ப்பாணம்.
077 399 5946/ 077 006 2051

(C-1050)

குடும்பத்தினர்


## பதவி வெற்றிடம்

- அலுவலகச் செய்தியாளர்கள்
  (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- முகாமைத்துவ உதவியாளர்கள்
  (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
  (சாதாரண தரம் கற்றிருத்தல், ஆண்கள்)

பொருத்தமானவர்கள் நேரில் அல்லது 076 097 3121 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ்ப்பாண நகருக்கு அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.


...ன் வீதி,
யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்,
வலம்புரி நாளிதழ்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஓரணியாக ஒன்று திரளுங்கள்!

## திராவிட கழகத் தலைவர் வீரமணி அழைப்பு



**(யாழ்ப்பாணம்)**

**கடந்த காலத்தில் பல இரத்தக்கறைகள் உள்ளன அவற்றை நாம் கண்ணீர் விட்டு அழித்துவிட முடியாது. மீண்டும் நாம் வாழ்வதற்கு இத்தனை இடர்பாடுகள் எமக்குள் இருந்தாலும் நாம் ஓரணியாக ஒன்று திரள வேண்டும் என திராவிட கழகத்தின் தலைவர் கி.வீரமணி யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.**

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் 97 ஆவது பிறந்தநாள் நினைவு பேருரை அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் ரிம்மர் மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் எம்.கே சிவாஜிலிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், நாம் இன்னும் உரிமைகளை பெறவில்லை. நாம் லட்சக்கணக்கில் ஆயிரக்கணக்கில் மிகப்பெரிய இழப்புகளை பெற்றுள்ளோம். நாம் சிந்திக்கிற பொழுது அனைவரும் ஒற்றுமையாக சிந்திக்க வேண்டும்.

அமிர்தலிங்கம் அவர்கள் மிகப் பெரும் ஆளுமை உள்ள மனிதர். எனவே அவர் பல்வேறு வழிமுறைகளில் தமிழ் மக்களுக்கும் தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் தனது கருத்துக்களை விட்டுச் சென்றார்.

மக்களுடைய பிரச்சினைகளை நாம் படிக்கட்டாக மாற்றி மறக்கப்பட்ட இனத்தை மீண்டும் விழிப்புணர்வுடன் கொண்டு செல்வதற்கு அனைவரும் ஓரணியாக திகழ வேண்டும் என தெரிவித்தார். (நி-33)

# எமது அரசாங்கத்தில் அநியாய வரிகள் நீக்கப்படும்

## மக்கள் சந்திப்பில் அநுர

(கொழும்பு)

நாடு இன்று ஏழ்மை நிலையிலிருந்தாலும் நாட்டை ஆட்சி செய்த குடும்பங்கள் செல்வந்தர்களாக மாறியுள்ளதாகத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வெல்லவாய பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நமது நாடு கடனை மீளச் செலுத்த முடியாத அளவுக்கு ஒரு வறுமையான நாடாக உள்ளது.

முற்றிலும் கடலால் சூழப்பட்டிருந்தாலும் உப்பினை இறக்குமதி செய்யும் நிலையில் உள்ளது.

எனினும் மகிந்த, சஷீந்திர, நாமல் மற்றும் ரணில் போன்றவர்கள் செல்வந்தர்களாக உள்ளனர்.

ரணில் ஜனாதிபதியாகும் போது சாகல ஆலோசகராகிறார். அவரது சகோதரர் இலங்கை வங்கியின் தலைவராகிறார்.

எனவே ஒருவர் நாட்டை ஆட்சி செய்யும்போது அவரது குடும்பமே பொறுப்புகளை ஏற்கின்றன.

2023 ஆம் ஆண்டு முதல் சுகாதார சேவைக்கு வற் வரி விதிக்கப்படுகிறது.

ஆகவே எமது அரசாங்கத்தில் வெற் உள்ளிட்ட சகல வரிகளும் நீக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (நி)


# ஜனாதிபதி-ஆயர் பேரவை சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க, கத்தோலிக்க ஆயர் கள் பேரவையின் தலைவர் அருட்தந்தை ஹெரோல்ட் அந்தோனி பெரேரா உள்ளிட்ட குழுவினரை நேற்று சந்தித் துள்ளார். இந்த சந்திப்பின் போது கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் தலைவர் அருட் தந்தை ஹெரோல்ட் அந்தோனி பெரேரா, பொதுச் செயலாளர் டொன் அன்டன் ஜெயக்கொடி, கொழும்பு உதவி ஆயர் மற்றும் கத்தோலிக்க ஆயர் பேரவையின் அங்கத்தவர்களைச் சந்தித்து நாட்டில் தற்போது நடைபெற்று வரும் கல்வி சீர் திருத்தங்கள், ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் விசார ணைகள், சுற்றுச்சூழல் மற் றும் மத விடயங்கள் குறித்து கலந்துரையாடினார்.

அத்தோடு நாட்டின் பொரு ளாதாரம் மற்றும் மக்களின் வாழ்க்கைச் செலவு சவால் களுக்கு ஈடுகொடுப்பதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்தும் அவர்களுக்கு விளக்கமளித்தார். (நி)

# 10 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்-நாமல்



(கொழும்பு)

பணவீக்கத்துக்கு ஏற்ப அரச பணியாளர்களுக்கான வேதனத்தை அதிகரிக்கக்கூடியதொரு பொறிமுறை உருவாக்கப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திவுலப்பிட்டிய பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்கான வரிசைகள் ஏற்பட்டிருந்தன.

எனினும் கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப் பத்திரங்களுக்கான வரிசைகளை ஏற்படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது.

அதற்காகத் தொழில்நுட்பத்துடன் இணைந்த புதிய வேலைத்திட்டங்கள் உருவாக்கப்படும்.

தேர்தல் காலங்களில் தேர்தல் மேடைகளில் வேதனங்களை அதிகரிப்பதாக வாக்குறுதியளிக்கும் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

அத்துடன் எதிர்வரும் 5 வருடங்களில் 10 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (நி)


1 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 14 02 1948



விண்ணில் 07 09 2023

அமரர்
ஐயாத்துரை குணரத்தினம்

திதி : தேய்பிறை அட்டமி

எங்களின் இதய தெய்வமே!
ஓராண்டு சென்றாலும்-உம்
நினைவுகள் எம்மை விட்டு நீங்கவில்லை
எங்கள் நெஞ்சமதில் நிறைந்திருக்கும்
அன்புத் தெய்வத்தின் பொற்பாதத்தில்
மலர்தூவி அஞ்சலி செய்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில் (C-1046)

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டி

# 703 புள்ளிகளைப் பெற்று

## மன்னார் கல்வி வலயம் முதலிடத்தில்

**வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டியில் மன்னார் கல்வி வலயம் முதலாமிடத்தை பெற்றது.**



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண் கள், பெண் களுக்கான மெய் வல்லுநர் போட் டிகள் கடந்த 20 ஆம் திகதி முதல் நேற்று முன் தினம் சனிக்கிழமை வரை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடை பெற்றன.

இதில் ஒட்டுமொத்த புள்ளி களின் அடிப்படையில் மன்னார் கல்வி வலயம் 703 புள்ளி களைப் பெற்று முதலாமிடத்தையும் வலிகாமம் கல்வி வலயம் 529 புள்ளிகளைப் பெற்று இரண் டாமிடத்தையும் யாழ்ப்பாண கல்வி வலயம் 408 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன. (நி-90)

### பெண்களுக்கான 200 மீ. ஓட்டத்தில்

## மு/பாரதி மகா வித். முதலிடம்

வடமாகாண பாடசர்லைக ளுக்கு இடையிலான 20 வய திற்கு உட்பட்ட பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் முல்லைத் தீவு பாரதி மகாவித்தியாலயத் தைப் பிரதிநிதித்துவம் செய்த ரி.டெஸ்னி தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

வடமாகாண பாடசாலைக ளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மெய் வல்லுநர் போட்டிகள் யாழ்ப் பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரு கின்றன.

இதில் 20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் முல்லைத்தீவு பாரதி மகா வித்தியாலயத்தைப் பிரதி நிதித்துவம் செய்த ரி.டெஸ்னி தங்கப் பதக்கத்தையும் மாங் குளம் மகா வித்தியாலயத்தைப் பிரதி நிதித்துவம் செய்த வி.தபித்தா வெள்ளிப் பதக்கத தையும் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியைப் பிரதி நிதித்துவம் செய்த ஆர்.டானுஜா வெண்கல பதக் கத்தையும் கைப்பற்றினர். (நி-90)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3205

**கார்த்திகேயன்**




**அக்ஷயன்**




**கிஷாளினி**




**டர்சிகா**




**மயூரன்**




**டஜின்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூரான் திருவிழவை நான் கண்டு கொண்டேனே! - கம்பவாரிதி இ. ஜெயராஜ்

## கார்த்திகைத் திருவிழா

கார்த்திகையாம் பெண்டிரவர் கையில் நின்று
கந்தனவன் வளர்ந்த கதை நினைவிற் கொண்டு
ஆர்த்த பெரும் நல்லூரான் விழவில் அன்று
அழகுடனே கந்தனவன் அடியார்சூழ
தேர்ந்த நறும் பூவதனால் ஆன நல்ல
திகழ்கின்ற சப்பரத்தில் சேர்ந்து மெல்ல
ஊர்ந்து வரும் காட்சி தனை என்ன சொல்ல?
உலகத்தோர் பிறவிதனை உதிர்ப்பான் கந்தன்.

கம்பவாரிதி இ.ஜெயராஜ்

## நூல் வெளியீடு

(அக்கராயன்)


ஆசிரியர் க.விஜயசேகரன் பற்றிய பன்முகன் நூல் வெளியீட்டு விழா கிளிநொச்சி திறன்விருத்தி மண்டபத்தில் எதிர்வரும் 31.08.2024 சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி ஓய்வு நிலைக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தலைமையில் நடைபெறவுள்ளது. ( நி-350)

## ஆவினங்களுக்காக நீர்த் தடாகம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு திருநகர் கிராமத்தில் ஆவினங்கள் நீர் அருந்த தண்ணீர்த் தடாகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

திருநகர் கமக்கார அமைப்பினால் இத் தடாகம் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்காக அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் அதிகாரிகள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (நி-350)




## நம்மைக் காக்க மயிலேறி வருவாயா? கந்தா!

நல்லூரில் வீற்றிருந்து நல்லாட்சி புரியும் கந்தா!
அடியவர்கள் குறைகள் தீர்க்கும் அலங்காரக் கந்தா!
பரமனுக்கு உபதேசம் செய்த பாலமுருகா!
நாட்டில் வாள் வெட்டுக் கலாசாரம் ஒரு புறம்
போதைவஸ்து கலாசாரப் பாவனையோ மறுபுறம்
தவறான முடிவெடுத்து தினம் தற்கொலை
செய்வோர் ஒருபுறம்
எல்லையில்லாத் துன்பமதில் எந்நாளும் தவிக்கிறோம்
எம்மினத்தவர்களை துன்பத்தில் இருந்து காத்திட
மயிலேறி வருவாயா கந்தா!

நயினை விசு
இராசநாயகம்

# அஞ்சல் பணியாளர்களின் விடுமுறை இரத்து

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் நிறைவடையும் வரையில் சகல அஞ்சல் பணியாளர்களின் விடுமுறைகளும் உடன் அமுலாகும் வகையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பிரதி அஞ்சல் மா அதிபர் ராஜித ரணசிங்க அறிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான செயற்பாடுகளை கருத்திற் கொண்டு அவர்களின் விடுமுறையை இரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதி அஞ்சல்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

மேலும் அத்தியாவசிய காரணங்களுக்காக விடுமுறை எடுக்க வேண்டுமாயின் மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதி அஞ்சல்மா மா அதிபரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென பிரதி அஞ்சல்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார். (நி)

# வன்னியில் 30,6081 பேர் வாக்களிக்கத் தகுதி

(வவுனியா)

ஜனாதிபதித் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் 30,6081 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பாக வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் 30,6081 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் 12,8585 வாக்காளர்களும், முல்லைத்தீவில் 86,889 வாக்காளர்களும், மன்னார் மாவட்டத்தில் 90,607 வாக்காளர்களும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அத்துடன், வன்னித் தேர்தல் தொகுதியில் 13,389 தபால் மூல வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதுடன், 228 தபால் வாக்காளர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார். (நி)

## நல்லைக் கந்தவேளே!

அன்புடன் பூசித்த அருணகிரி நாதற்கு
அளைந்தபா வங்களநீக்கி
இன்பமுற வேலினால் "ஓம்" மெழுதி நாவிலே
இலங்குதமி ழோசைபெருக
என்றுமே யழியாது வேற்றதிருப் புகழினை
இங்கித மாக்கிமகிழ்ந்தாய்
நன்றினிது செய்தெங்கள் புன்வினைகள்
போக்குவாய்
நவநல்லைக் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்,
நவ.பாலகோபால்.

# இராசிபலன்

26.08.2024
ஆவணி 10, திங்கட்கிழமை
சப்தமி முற்பகல் 9.15 மணிவரை

கார்த்திகை முன்னிரவு 9.45 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை

கார்த்திகை விரதம்
சந்திராஷ்டமம் - உத்தரம், அத்தம்

வளவன்

**மேஷம்:** பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள்.

**ரிஷபம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்:** குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, பணியில் தீவிரம் காட்டுவீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**துலாம்:** சில பிரச்சினையைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**தனுசு:** கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**மகரம்:** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**மீனம்:** தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள்.

ஆயிரம் சாட்சிகளுக்கு சமமானது மனசாட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரவன்னியனின் நினைவு நாள் நிகழ்வு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரில் அமைந்திருந்த ஒல்லாந்தர் கோட்டையை போரிட்டு வெற்றி கொண்ட வன்னியின் இறுதி மன்னன் மாவீரன் பண்டார வன்னியனின் 221 ஆம் ஆண்டு வெற்றி நாள் நினைவு கூரல் நிகழ்வு நேற்று ஞாயிற் றுக்கிழமை முல்லைத்தீவு நக ரில் இடம்பெற்றது.

இதில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன் னாள் பிரதேச சபை உறுப்பினர் இ.ஜெகதீசன், தமிழரசு கட்சி யின் உறுப்பினர் ஜீவன், மற் றும் சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (நி-299)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங் கலைஞர் மன்றம் மற்றும் தெல் லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று திங்கட்கிழமை நல்லூர் துர்க் காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

மாலை 6.45-7.10 மணி வரை இடம்பெறவுள்ள இசை யரங்கில் பாட்டு பரஞ்சோதி சாரங்கன், வயலின்-கே.வேல தீபன், மிருதங்கம்-ப.விக்னேஸ்வரன், கஞ்சிரா-அ.சங்கரன், கடம்-சு.கார்த் திகன் ஆகியோர் பங்குபற்ற வுள்ளனர்.

7.15-8.05 மணிவரை இடம்பெறவுள்ள இசையரங்கில் பாட்டு-பரமேஸ்வரி கணேசன், வயலின் - இ. நிரோஜன், மிருதங்கம் - மு. சுலக்சன், முகர்சிங்-நி.மோகனதர்சன் ஆகியோர் நிகழ்த்தவுள்ள னர். (நி)

# பருத்தித்துறையில் கைதான தமிழக மீனவர்களுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பருத்தித் துறை கடற்பகுதியில் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடு பட்ட குற்றச்சாட்டில் கைதான 11 தமிழக கடற்றொழிலாளர்களை யும் செப்ரெம்பர் 6 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்று உத்தர விட்டுள்ளது.

பருத்தித்துறை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடற்றொ ழிலில் ஈடுபட்ட நாகப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த 11 கடற் றொழிலாளர்கள் நேற்று முன் தினம் சனிக்கிழமை அதி காலை கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் ஊடாக கடற் படையினர் நீதிமன்றில் முற் படுத்தினர். அதனை தொடர்ந்து அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (நி-33)

# 1500 கிலோ எடையுடைய வாகனத்தை காதுகளால் இழுத்து சாதனை



(சாவகச்சேரி)

1500 கிலோ எடை கொண்ட ஹயஸ் வாகனத்தை தனது காதுகளால் இழுத்து தென்ம ராட்சியின் சாதனை நாயகன் செல்லையா திருச்செல்வம் புதிய சாதனை படைத்துள் ளார்.

இதன்போது அவர் ஹயஸ் வாகனத்தை 100 மீற்றர் தூரம் தனது இரு காதுகளால் கட்டி இழுத்து சாதனை படைத்துள் ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் கொடி காமம், நட்சத்திர மஹால் முன் றலில் ஏ9 வீதியில் இந்த சாதனை நிகழ்வு இடம்பெற் றது.

60 வயதான உலக சாத னையாளர் திருச்செல்வம் தமிழ்நாடு, கொழும்பு, யாழ்ப் பாணம் எனப்பல இடங்களிலும் தனது தாடி, கழுத்து மற்றும் தலைமுடி ஆகியவற்றால் கனரக வாகனங்களை இழுத்து சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித் துள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி-30)

# இந்தியப் போர்க்கப்பல் இலங்கைக்கு வருகை



(கொழும்பு)

இந்தியக் கடற்படையின் முன்னணி போர்க்கப்பலான ஐ.என்.எஸ் மும்பை இன்று இலங்கை வரவுள்ளது.


மூன்று நாட்கள் விஜய மொன்றை மேற்கொண்டு இலங்கை வரும் குறித்த கப்ப லுக்குக் கொழும்பு துறை முகத்தில் தமது சம்பிரதாய முறைப்படி வரவேற்பதற்கு இலங்கை கடற்படையினர் திட்டமிட்டுள்ளனர்.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட குறித்த கப்பல் 2001 ஆம் ஆண்டு இந்தியக் கடற் படையில் இணைக்கப்பட்டது.

ஐ.என்.எஸ் மும்பை கப்ப லானது இலங்கை விமானப் படையால் இயக்கப்படும் டோர்னியர் கடல் கண்காணிப்பு விமானத்திற்கான அத்தி யாவசிய உதிரிப்பாகங்களைக் கொண்டு வரவுள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது. (நி)

# ஜனாஸாக்கள் தகனம்; மன்னிப்புக் கோரிய ரணில்

## இழப்பீடு வழங்கவும் தீர்மானம்



(கொழும்பு)

பசியோடு இருந்த மக்களின் துன்பத்தைக் கண்டு, நாட்டைப் பொறுப்பேற்று அந்த மக்களின் பசியைப் போக்கியுள்ளேன். பசிக்கு இனமோ மதமோ கிடையாது. அதேபோல் கட்சியும் இல்லை. இப்படியான தருணத்தில் நாட்டை பற்றியே சிந்திக்க வேண்டும் என ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேசிய காங்கிரஸ் மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை அக் கரைப்பற்று நீர்ப்பூங்காவில் நடைபெற்றது. மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனா திபதி இதனை மேற்கண்டவாறு தெரி வித்தார்.

பழைய அரசியலை விட்டு விடுங்கள். ஒன்றுபட்டு இந்த நாட்டை முன்னேற்றுவோம். விவசாயம் மற்றும் சுற்றுலா உள்ளிட்ட துறைகளை முன் னேற்றுவோம்.

அனைத்து இன மக்க ளையும் ஒரே வகையில் பார்க்கிறேன். முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தகனம் செய் யப்பட்டதால் அவர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்ட னர். அந்த தவறை எனது அர சாங்கம் செய்யவில்லை.

இருப்பினும், இலங்கை அர சாங்கம் ஒன்றே அந்த தவறை செய்தது என்ற வகையில் எனது அமைச்சரவையும் நானும் முஸ்லிம் மக்களிடம் மன்னிப்பு கோரினோம். அவர் களுக்கு இழப்பீடு வழங்கவும் தீர்மானித்தோம்.

விருப்பமானவர்கள் தகனம் செய்யவும், நல்லடக்கம் செய் யவும், மருத்துவ கல்லூரிக ளுக்கு உடல்களை வழங்க வும் தீர்மானிக்கும் சுதந்தி ரத்தை வழங்குவதற்கான சட் டமொன்றைத் தயாரிக்குமாறு அமைச்சர் அலி சப்ரியிடம் அறிவுறுத்தியுள்ளேன் என அவர் தெரிவித்தார். (நி)

# இஸ்ரேல்-லெபனானிலுள்ள இலங்கையர்கள் குறித்து அவதானம்

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இஸ்ரேல் மற்றும் லெப னானில் ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அங்குள்ள இலங் கையர்களின் பாதுகாப்பு குறித்து மிகுந்த அவதானம் செலுத்தி வருவதாக வெளி விவகார அமைச்சு தெரி வித்துள்ளது.

இது தொடர்பில் தொடர்ந்தும் அங்குள்ள தூதரக அதிகாரி களுடன் கலந்துரையாடி வரு வதாக வெளிவிவகார அமைச் சின் பேச்சாளர் ஒருவர் தெரி வித்தார்.

அவசரநிலை ஏற்பட்டால், அது தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்தும் ஆலோசிக்கப்படுவ தாகவும் அவர் குறிப்பிட்டுள் ளார்.


நேற்றுக் காலை ஹிஸ் புல்லா தரப்பினர், வடக்கு இஸ் ரேல் மீது 200 இற்கும் மேற் பட்ட எறிகணை தாக்குதல் களை நடத்தியது.

இதனால் இஸ்ரேல் பாது காப்பு அமைச்சு அடுத்த 48 மணி நேரத்திற்கு அவசர நிலையை பிரகடனப்படுத்தி யுள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காத்திரமான பேச்சுவார்த்தை எனில் கலந்தாலோசித்து முடிவெடுப்போம்

## தென்பகுதி வேட்பாளர்கள் தொடர்பில் சுரேஸ்



(வவுனியா)

தென்பகுதி வேட்பாளர்கள் காத்திரமான பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் அது தொடர்பில் கூடி ஆராய்ந்து முடிவுகளை எடுப்போம் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் வவுனியா, கோவில் புதுக்குளம் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று இடம்பெற்றது. அதன்பின் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

என்ன கொள்கைகளுக்காக பொதுவேட்பாளரை நிறுத்தினோமோ அந்தக் கொள்கைகளை வெற்றியடையச் செய்யும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவுள்ளோம். இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட எமது முடிவுகள் தொடர்பாக சிவில் அமைப்புகளுடன் பேசி பொதுவான ஒரு முடிவை எடுத்து அதனை முன்னெடுத்துச் செல்வோம்.

இதில் அங்கத்துவம் வகிக்கும் சில கட்சிகள் தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்களை சந்தித்துள்ளார்கள். இதன்போது தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்பதையும், தென்பகுதி வேட்பாளரை நம்பி பல தடவை வாக்களித்து இருக்கின்றோம் என்பதையும் ஆனாலும் எமது நம்பிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்பதையும் அவர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார்கள்.

ஜனாதிபதியாக வந்தால் என்ன செய்வோம் என அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாகவும் கூறியுள்ளார்கள். எங்களது விடயங்களையும் அங்கு சென்றவர்கள் தெரியப்படுத்தியுள்ளார்கள்.

நாம் ஒன்று சேர்ந்து பொது வேட்பாளருக்கு தொடர்ந்தும் வாக்கு சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளோம். எதிர்காலத்தில் காத்திரமான பேச்சுவார்த்தைக்கு வேட்பாளர்கள் வருவார்களாக இருந்தால் அது தொடர்பில் நாம் கூடி ஆராய்ந்து முடிவுகளை எடுப்போம் என அவர் தெரிவித்தார். (நி-250)

# மணிவிழா வாழ்த்து

### திரு சத்தியானந்தசிவம் தவநேசன்

(SLTS-I) SPL Trained.Hindusium B.Com, B.A, M.A, Dip.in Education)

பிரதி அதிபர், யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்

**சேவை விபரம்**

- யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் (26.01.1998–01.03.1999)
- கோப்பாய் ஆசிரியர் கலாசாலை (02.03.1999–14.01.2001)
- யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் (15.01.2001–31.12.2010)
- மு/கற்சிலைமடு அ.த.க பாடசாலை (01.01.2011–27.01.2013)
- யா/பெரியபுலம் மகா வித்தியாலயம் (28.01.2013–15.01.2017)
- யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் (16.01.2017–25.08.2024)




எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்காக நிறைவான சேவையாற்றி, ஓய்வு பெறும் ஆசிரியரை வாழ்த்தி அவரது ஓய்வுக்காலம் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(1774)

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்,
யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்.

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை
## உப அலுவலகம்-தெல்லிப்பளை

**விண்ணப்பதாரர்-வேலன் நடராசா**
**முகவரி-பொற்கலம்தம்பை, வித்தகபுரம், தெல்லிப்பளை.**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை, தெல்லிப்பளை உபஅலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 11, குப்பிளாக்கடவை 1 ஆம் வீதியில் இவ் ஆதனம் அமைந்துள்ளது.

குறித்த ஆதனமானது 2022 ஆம் ஆண்டு தை மாதம் 05 ஆம் திகதி, பிரசித்த நொத்தாரிஸ் றெ.றோய் டிலக்சன் முகதாவில் 406 ஆம் இலக்கத்தில் முடிந்த வெளிப்படுத்தல் உறுதிப்படி வேலன் நடராசா என்பவரை வந்தடைந்தது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்கு பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று தெல்லிப்பளை தென்மேற்கு இறை நிலப்பரப்பு 5 குளி 07.11 இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் கே.ஆறுமுகம் அவர்களால் வரையப்பட்ட 7636/14.02.2021 ஆம் இலக்க வரைபடத்தின்படி துண்டு -01 ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு-காஞ்சியர் பூரணத்தின் ஆதனம்
வடக்கு-நடராசா விக்னேஸ்வரன் சங்கரப்பிள்ளை பார்வதி ஆகியோரின் ஆதனம்
மேற்கு-சீனியர் சின்னக்கண்டுவின் ஆதனமும் ஒழுங்கையும்
தெற்கு-ஒழுங்கை

மேற்குறித்த ஆதனத்தை வேலன் நடராசா எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்குப் பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).**

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 22<br>10 இல் சூரி செவ்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்: A/L, Manager (France)<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள மணமகள்<br>தொ.இ: B/14701 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 63 3/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: சித்த மருத்துவர்<br>எதிர்பார்ப்பு: Engineer, Doctor, Lecturer<br>தொ.இ: G/14703 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 28 1/4<br>உயரம்: 6<br>தகைமை/தொழில்:A/L, Driver (Canada)<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள மணமகள்<br>தொ.இ: B/14702 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 39 1/2<br>உயரம் : 5'<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: சொந்த தொழில்<br>தொ.இ: G/14704 |
| பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 20<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: Diploma in Computer Scicnce Manager (Australia)<br>எதிர்பார்ப்பு: படித்தவர்கள், விவாகரத்தாகி பிள்ளைகள் அற்றவர்கள்<br>தொ.இ: B/14705 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 11<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, தையல்<br>எதிர்பார்ப்பு: தகுதியான மணமகன்<br>தொ.இ: G/14708 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில மணி நேரங்களிலே

# 15 லட்சத்துக்கு மேல் 'லைக்ஸ்'களை அள்ளிய புகைப்படம்



(கீவ்)
பிரதமர் நரேந்திர மோடி முதல் முறையாக உக்ரைன் நாட்டுக்குச் சென்று அந்நாட்டு ஜனாதிபதி ஜெலன்ஸ்கியைச் சந்தித்து பேசினார்.

அப்போது பிரதமர் மோடியுடன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

அந்தப் புகைப்படத்தை ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தனது இன்ஸ்டாகிராம் சமூக வலைதளத்தில் வெளியிட்டார்.

அதில், இந்தியா-உக்ரைன் இடையிலான உறவுகள் மற்றும் பேச்சுவார்த்தையை வலுப்படுத்துவதற்கு எங்கள் சந்திப்பு முக்கியமானது என குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி ஜெலன்ஸ்கியின் இந்தப் பதிவு சில மணி நேரங்களில் 15 லட்சத்துக்கு மேற்பட்ட "லைக்ஸ்" களைப் பெற்றது.

இது அவரது சமூக வலைத்தளப் பதிவுகளில் சாதனையாக மாறியது.

இதற்கு முன் 7.8 லட்சம் "லைக்ஸ்"களை பெற்றதே அவரது அதிகபட்சமாக இருந்தது.

தற்போது பிரதமர் மோடியுடனான புகைப்படம் அதை முறியடித்துள்ளது. (நி)



## சீனாவில் தொடரும் கனமழை 11 பேர் உயிரிழப்பு


(பீஜிங்)
வடகிழக்கு சீனாவின் லியோனிங் மாகாணத்தில் உள்ள ஹூலுடாங் நகரில் ஒரு வாரமாக பெய்து வரும் கனமழையால் 11 பேர் உயிரிழந்துள்ளதோடு மேலும் 14 பேர் காணாமல் போயுள்ளதாக சீன செய்திகள் தெரிவிக்கின்றன.

காணாமல் போனவர்களை தேடும் பணியில் மீட்புக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அதே நேரத்தில் கனமழையால் 100 கோடிக்கும் அதிக பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி)


# இஸ்ரே

(ஜெருசலேம்) –
ஹமாஸ் தலை
கொடுக்கும் வகை
நடத்தி வருவதால்,
அவசர நிலையை



மேற்காசிய நாடான இஸ்ரேல், பாலஸ்தீனியர்கள் வசிக்கும் காசா மீது இரா

## வேகமாக பரவும் எலிக்காய்ச்சல் 121 பேர் கேரளாவில் பலி



(டில்லி)
இந்தியாவில் கேரள மாநிலத்தில் எலிக்காய்ச்சலால் இதுவரை 121 பேர் பலியாகியுள்ளனர்.

கேரள மாநிலத்தில் ஒவ்வொரு பருவமழையின் போது தொற்றுநோய்கள் அதிகளவில் பரவுவது வாடிக்கையாக இருக்கிறது.

மேலும் அரிய வகை காய்ச்சலான மேற்குநைல், அமீபிக் மூளைக்காய்ச்சல் உள்ளிட்ட காய்ச்சல்களும் பரவின. இதற்கு மத்தியில் எலிக்காய்ச்சலும் கேரளாவில் பரவியுள்ளது.

மேலும் எலிக்காய்ச்சலுக்கு அதிகளவில் உயிர் பலியும் பதிவாகியுள்ளது. அதற்கமைய கேரள மாநிலத்தில் இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து தற்போது வரை எலி காய்ச்சலுக்கு உள்ளாகி 121 பேர் பலியாகியுள்ளனர்.

மேலும் 1,936 பேர் எலி காய்ச்சலால் பாதிக்கப்பட்டு பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகின்றனர்.

இந்த ஆண்டு 8 மாதங்கள் முடிவுறாத நிலையில் 121 பேர் பலியாகி விட்டனர். இந்த மாதத்தில் மட்டும் 24 பேர் எலிக் காய்ச்சலால் இறந்துள்ளனர்.

எலிக்காய்ச்சல் பாதிப்பு மற்றும் அதனால் பலியாவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் பொது மக்கள் கவனமுடனும், விழிப்புடனும் இருக்குமாறு மாநில சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது. (நி)

## 156 மருந்துகளுக்கு இந்தியாவில் தடை மத்திய அரசு அதிரடி தீர்மானம்

(டில்லி)
இந்தியாவில் சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்படும் 156 மருந்துகளுக்கு தடை விதிக்கத் தீர்மானித்துள்ளதாக இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த மருந்துகளின் பயன்பாடு மனித உடலுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என ஆய்வுகளில் தெரிய வந்துள்ள நிலையில் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி குறித்த மருந்துகளின் உற்பத்தி, விற்பனை மற்றும் விநியோகம் ஆகியவற்றுக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது.

முன்னதாக 2018 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் 328 மருந்துகளுக்கு தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சுனிதா வில்லியம்ஸை மீட்க 'ஸ்பேஸ் எக்ஸை' நாடும் நாசா

(வோஷிங்டன்)
விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ், புஜ் வில்மோர் ஆகிய இருவரும் 2025 பெப்ரவரியில் பூமிக்குத் திரும்புவார்கள் என அறிவிக்கப்பட்ட நிலையில், பெரும் பணக்காரரான எலான் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவன உதவியுடன் அவர்களை மீட்டுவர நாசா நடவடிக்கையை எடுத்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோர் கடந்த ஜூன் 5 ஆம் திகதி விண்வெளிக்கு ஆய்வுக்கு சென்றனர். திட்டமிட்டபடி பூமிக்கு திரும்ப திட்டமிட்டிருந்த நிலையில் சில தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பூமிக்குத் திரும்பும் பயணம் ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் 2025 பெப்ரவரி மாதம் வரை சுனிதா வில்லியம்ஸ் விண்வெளி நிலையத்திலேயே இருக்க வேண்டியிருக்கும் என நாசா அறிவித்துள்ளது.

இந்நிலையில் க்ரூ-9



என்ற திட்டத்தின் கீழ், எலான் மஸ்க்கின் ஸ்பேஸ்-எக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து செப்ரெம்பர் மாதம் 2 பேர் கொண்ட ஸ்பேஸ் எக்ஸ் டிராகன் குழு உதவியுடன் சர்வதேச விண்வெளி நிலையத்தில் சிக்கியுள்ள சுனிதா வில்லியம்ஸ், புஜ் வில்மோரை பூமிக்கு மீட்டுவர உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெளிநாடு

# ரேலில் அவசர நிலை பிரகடனம்!

ம்)

**தலைவர் படுகொலைக்கு பதிலடி வகையில், ஹிஸ்புல்லா தாக்குதல் தால், அடுத்து 48 மணி நேரத்திற்கு லையை இஸ்ரேல் அறிவித்துள்ளது.**




ல், சா

மீது கடந்தாண்டு ஒக்டோபரில் இராணுவத் தாக்குதலை ஆரம்பித்தது.

அதை எதிர்த்து, காசாவை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள "ஹமாஸ்" அமைப்பினர் போரிட்டு வருகின்றனர்.

பாலஸ்தீன மக்களுக்கும், ஹமாஸ் அமைப்புக்கும் ஆதரவாக, அண்டை நாடான லெபனானில் இருக்கும் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.



இந்நிலையில், ஹமாஸ் தலைவர் ஈரானில் கொல்லப்பட்டார். இதற்கு இஸ்ரேல் தான் காரணம் என குற்றம் சாட்டப்படுகிறது. ஹமாஸ் தலைவர் படுகொலைக்கு பதிலடி கொடுக்கும் வகையில், வடக்கு இஸ்ரேல் மீது நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் ஹிஸ்புல்லா படையினர், 70 ரொக்கெட் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தினர். குறிப்பாக, இஸ்ரேல் இராணுவ வீரர்கள் தங்கியிருக்கும் குடியிருப்புகள் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையில் போர் இராணுவ அமைச்சரவை கூட்டம் நடந்தது. அடுத்து 48 மணி நேரத்திற்கு இராணுவ அவசரநிலையை அறிவிக்க முடிவு செய்யப்பட்டது.

லெபனான் நாட்டில் இஸ்ரேலை ஒட்டிய பகுதியில் வசிக்கும் மக்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்கு சென்று விட வேண்டும் என்றும் இஸ்ரேல் எச்சரித்துள்ளது. இதன் மூலம் காசாவில் நடத்தியது போன்ற பெரிய அளவிலான தாக்குதலுக்கு இஸ்ரேல் தயாராகி விட்டது தெரியவந்துள்ளது. (நி)

# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு
## 2 குழந்தைகள் உட்பட 4 பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பயங்கர குண்டு வெடிப்பில் 2 குழந்தைகள் உட்பட 4 பேர் பலியாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


பாகிஸ்தானின் தென்மேற்கு பகுதியில் பலுசிஸ்தான் மாகாணத்தை தனி நாடாக அறிவிக்க கோரி ஆயுதம் தாங்கிய தடை செய்யப்பட்ட தெஹ்ரிக்-இ-தலிபான் பாகிஸ்தான் என்ற அமைப்பு போராடி வருவதோடு பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படையினரின் நிலைகளை குறி வைத்து தொடர் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் பலுசிஸ்தானின் பிஷின் மாவட்டம் சுர்காப் சவுக் அருகே உள்ள முக்கிய சந்தைப்பகுதியில் சக்தி வாய்ந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் 2 குழந்தைகள், ஒரு பெண் உட்பட 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.


படுகாயமடைந்த 14 பேர் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 5 பேரின் உடல் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தடை செய்யப்பட்ட தெஹ்ரிக்-இ-தலிபான் பாகிஸ்தான் என்ற அமைப்பு கடந்த 2022 ஆம் ஆண்டு அந்நாட்டு அரசுடனான போர் நிறுத்த ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)



# கச்சா எண்ணெயுடன் சென்ற கப்பல் தீ விபத்து



செங்கடலில் கச்சா எண்ணெய் ஏற்றிக் கொண்டு சென்ற கப்பலில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இஸ்ரேல் - ஹமாஸ் போரில் பாலஸ்தீனத்திற்கு ஆதரவளிப்பதாக ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

அதன் எதிரொலியாக செங்கடலில் பயணிக்கும் இஸ்ரேல் ஆதரவு நாடுகளின் சரக்கு கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தொடர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், செங்கடல் வழியாக சென்ற 1 இலட்சத்து 50 ஆயிரம் தொன் எடை கொண்ட கச்சா எண்ணெய்யை ஏற்றிக்கொண்டு கிரீஸ் நாட்டைச் சேர்ந்த சரக்கு கப்பல் சென்றது.

இந்த கப்பலை குறி வைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கடந்த வாரம் தாக்குதல் நடத்திய நிலையில் கப்பலை கைவிட்டு விட்டு சிப்பந்திகள் வெளியேறினர்.

இந்த நிலையில் செங்கடலில் நின்ற இந்த கப்பலில் குறித்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட விரோத மணல் அகழ்வு;
# அதிகாரிகள் கள விஜயம்

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டா வளை பிரதேசத்திற் குட்பட்ட பெரிய குளம் கனகராய னாற்றுப் பகுதியில் பல ஏக்கர் காணி களில் சட்டவிரோத மணல் அகழ் வுகள் தொடர்ந்து மேற்கொள் ளப்பட்டு வரு கின்றன.

கிளிநொச்சி பொலிஸ் பிரி வுக்குட்பட்ட கனகராயன் ஆற் றினை அண்டிய பெரிய குளம் பகுதியிலும் தருமபுரம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதி யிலும் சுமார் 25 அடி ஆழத் துக்கும் மேலாக அதிக அள வில் கனரக வாகனங்கள் மூலம் மணல் அகழ்வு மேற் கொள்ளப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் மணல் அகழ்வு மேற் கொள் ளப் பட்டு வருவது தொடர்பாக பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட அரச அதிபர் ஆகியோரால் பொலிசாருக்கு தகவல் வழங் கியபோதும் இது வரை குறித்த மணல் அகழ்வை கட்டுப் படுத்த பொலி ஸார் எந்த வித மான நடவடிக் கைகளும் எடுக் கப்படவில்லை என தெரிவிக் கப்பட்டுள்ளது

குறித்த பகுதிகளை கிளி நொச்சி மாவட்ட அரச அதிபர் சு. முரளிதரன் மற்றும் பிரதேச பிரதேச செயலாளர் ரீ.பிருந் தாகரன் ஆகியோர் நேற்று நேரடியாக சென்று பார்வை யிட்டதுடன் இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு நடவடிக் கைகளுக்காக அறிவுறுத்துவ தாகவும் அரச அதிபர் தெரி வித்துள்ளார். (நி-315)

# பாரம்பரிய முறையில் நெல் அறுவடை



(முல்லைத்தீவு)

கிளிநொச்சி - விசுவமடு சிவில் பாதுகாப்பு திணைக் களத்தின் கீழ் இயங்கும் வட்டக்கச்சி வயல் செயற் றிட்டத்தின் கீழ் பாரம்பரிய முறையில் நெல் அறுவடை நேற்று மிகவும் சிறப்பாக இடம் பெற்றிருந்தது. (நி-299)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 250 | 250-300 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 190 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 200 | 150-200 | 200 |
| தக்காளி | 300 | 300 | 300 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 250 | 190 | 150-200 | 160 |
| கோவா | 300 | 320 | 350 | 400 | 300 |
| கரட் | 250 | 350 | 180 | 350 | 400 |
| பூசணி | 100 | 160 | 100 | 80 | 120 |
| புடோல் | 80 | 100 | 80 | 80 | 140 |
| வாழைக்காய் | 200 | 250 | 250 | 200-220 | 240 |
| சின்ன வெங்காயம் | 250 | 240 | 300-350 | 250-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 220 | 250 |
| பாகற்காய் | 300 | 300 | 350 | 300 | 250 |
| வெண்டக்காய் | 80 | 100 | 80 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 160 | 150 | 300 |
| பயற்றங்காய் | 250 | 200 | 150 | 200-250 | 200 |
| லீக்ஸ் | 300 | 350 | 320 | 350 | 400 |
| பீற்றூட் | 100 | 200 | 300 | 250 | 160 |
| கறிமிளகாய் | 400 | 700 | 600 | 350-400 | 600 |
| முருங்கைக்காய் | 300 | 150 | 250 | 100-150 | 160 |
| போஞ்சி | 400 | 650 | 550 | 400 | 600 |
| கத்தரி தம்புள்ள | 200 | 150 | 250 | -- | 280 |
| கீரை - 1 பிடி | 120 | 140 | 50 | 50-100 | 100 |
| தேசிக்காய் | 400 | 350 | 500 | 350-400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 130 | 80 | 80-140 | 100-130 |
| இராசவள்ளி | -- | 250 | 700 | 600 | 800 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 250 | -- | 320 |
| முள்ளங்கி | 100 | 140 | 150 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 90 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 50 | 80 | 100 | 80 |
| ஈரப்பலா | 100 | 60 | 50 | 80 | 80 |

## இன்று ஒரு தகவல் 220



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கலியுகம்

அப்பா பிள்ளையைப் பார்த்து சொல்லுகிறார். கடைக்குப் போய் பத்திரிகை வாங்கிக் கொண்டு வா என்று அதற்கு வேறே ஆளைப்பாரு என்று சொல்லி விட்டு போறான் பையன். என்னங்க? உங்க பிள்ளையே உங்களிடம் இப்படி சொல்லிவிட்டு போறான்னே என்று கேட்டால் அவனைச் சொல்லிக் குற்றமில்லை. கலிமுத்தி போய்விட்டது. அது தான் அப்படி சொல்லி விட்டுப் போறான் என்றார் அப்பா.

இந்த யுகங்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ தெரியவில்லை. இருந்தாலும் அதைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள் என்று தெரிந்துகொள்ளுவது தவறில்லை. இப்போது வருடம், மாதம், வாரம், நாள் இப்படி இருக்கிறது அல்லவா அது மாதிரி யுகங்கள் நான்கு.

வருடம், மாதம், திகதியை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஏன் என்றால் நாம் இருக்கிறதுக்குள்ளே அதெல்லாம் வந்து வந்து போகிறது. யுகங்கள் அப்படி இல்லை. சென்ற வருடம் உன்னை பொள்ளாச்சியிலே பார்த்ததேன் என்று சொல்ல முடியும். போன யுகத்திலே உன்னை புதுக்கோட்டையிலே பார்த்தேன் என்று சொல்ல முடியுமா?

எந்தெந்த யுகங்கள் எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்பதற்கு மேதாதிதி என்கிறவர் தான் முதலில் வியாக்கியானம் கொடுத்தார். அவருடைய கணிப்புப் படி கிருதயுகம் 4800 வருடம், திரேதாயுகம் 3600 வருடம், துவாபரயுகம் 2400 வருடம், கலியுகம் 1200வருடம். சாஸ்திர ரீதியாக ஆராய்ச்சி செய்து வேறு சில பேர் வேறு மாதிரியாகவும் கணக்குச் சொல்லுகிறார்கள். அவர்கள் கணக்குப்படி வருடம் 1000, 2000, 3000, 4000 என்று வருகிறது. அது எப்படியோ இருந்திட்டுப் போகட்டும்.

சுமார் அறுபது வருடங்களுக்கு முன்னர் பரமஹம்ஸ ஸ்ரீ ராஜ நாராயண்ஷட் சாஸ்திரி என்பவர் ஒரு நூல் எழுதினார். அவர் நிறைய ஆராய்ச்சியெல்லாம் செய்து விட்டு என்ன சொல்லியிருக்கின்றார் என்றால் 1943 ஓகஸ்ட் முதல் திகதி கலியுகம் முடிந்து கிருதயுகம் பிறந்துவிட்டது என்கின்றார். பாகவாத சுலோபப்படி (12.2.24) சூரியன், சந்திரன், குரு, பூச நட்சத்திரங்கள் எல்லாம் சமகாலத்திலே ஒரே ராசியிலே பிரவேசிக்கின்ற போது அல்லது சந்திரன், சூரியன், குரு இந்த மூன்றும் பூச நட்சத்திரத்திலே ஒரே ராசியிலே ஒரே நேரத்திலே சேர்கின்றபோது கலியுகம் முடிந்து கிருதயுகம் ஆரம்பமாகும்.

அந்த பூரணயோகம் 1943 ஓகஸ்ட் முதலாம் திகதி வந்துவிட்டது. அது தான் இவர் சொல்கின்ற கணக்கு. இருந்தாலும் கிருதயுகத்தின் முழுப்பலனும் கிடைப்பதற்கு 100 வருடம் ஆகுமாம். கிருதயுகத்திலே மக்களுக்கு நோய் வராதாம். அவர்கள் கோரிக்கைகள் எல்லாம் நிறைவேறுமாம். மக்களின் ஆயுள் 400 வருடமாகுமாம். அதன்பின் மறுபடியும் யுகம் மாற மாற தர்மத்தின் அளவு குறையக்குறைய ஆயுளும் குறையுமாம்.

கிருதயுகத்திலே ஒரே மதம். ஒரே கடவுள் என்கின்ற நிலைக்கு உலகம் வந்து விடுமாம். தர்மர் காலத்திலே நடந்த கதை ஒன்று உண்டு. அது துவாபர யுகத்தின் கடைசிக்கட்டம். அப்போது ஒருவர் தன்னுடைய நிலத்தை இன்னொருவருக்கு விற்றான். நிலத்தை வாங்கியவன் அதிலே உழவு செய்ய ஆரம்பித்தான்.

நிலத்தைத் தோண்டிய போது அதிலே ஒரு புதையல் கிடைத்தது. உடனே அந்த புதையலை எடுத்துக் கொண்டு அவன் நிலத்தை தன்னிடம் விற்றவனிடம் போனான். இதோ பாருங்கள் இந்தப்புதையல் உங்களுக்குத்தான் சொந்தம். நீங்கள் நிலத்தைத்தான் என்னிடம் விற்றீர்கள். புதையலை இல்லை. அதனாலே புதையலை எடுத்துக் கொள் ளுங்கள் என்றான்.

ஆனால் நிலத்தை விற்றவன் அதை வாங்க மறுத்து விட்டான். இந்தப்புதையல் உனக்குத்தான் சொந்தம். எப்போது நிலத்தை விற்றுவிட்டேனோ அப்போதே இதையும் விற்றுவிட்டதாகத் தான் அர்த்தம் என்றான். இரண்டு பேரும் தர்மரிடம் சென்று தங்களு டைய விவகாரத்தைச் சொல்கிறார்கள்.என்ன தீர்ப்பு சொல்வது என்று தெரியாமல் தர்மர் முழிக்கின்றார்.

கடைசியிலே சரி ஒரு பத்து நாள் கழித்து வந்து பாருங்கள் என்று சொல்லி அனுப்பி விட்டார். அதற்குள்ளே என்ன நடந்தது என்றால் கலியுகம் பிறந்து விட்டது. அதன்பின் இரண்டு பேரும் வந்தார்கள்.

நிலத்தை விற்றவன் புதையல் எனக்குத் தான் சேர வேண்டும். ஏன் என்றால் நான் நிலத்தை மட்டும் தான் விற்றேன் என்றான். வாங்கியவன் அதெல்லாம் கிடையாது. எப்போது நிலத்தை விற்றாரோ அப்போது புதையலையும் விற்றுவிட்டார் என்று தான் அர்த்தம் என்றான்.

தர்மர் சிரிக்கின்றார். கலியுகம் பிறந்து விட்டது என்பதை தர்மர் உணர்ந்தார். இப்போதும் பாருங்கள். ஒருவர் கத்தரி விதை வாங்கிக்கொண்டு வந்தார். அதை அவருக்கு மிகவும் நெருங்கிய சிநேகிதரிடம் கொடுத்தார். உங்கள் தோட்டத்திலே போடுங்கள் என்றார். காசு எவ்வளவு என்றார் இவர். அது எல்லாம் வேண்டாம் என்று விட்டு இவர் போனார். இவர் கத்தரி போட்டு நன்றாகக் காய்த்திருக்கின்றது.

விதை கொடுத்தவர் தற்செயலாக அவரைப் பார்க்க வந்தார். கத்தரி எப்படி இருக்கிறது என்று கேட்டார்.நன்றாக காய்த்துள்ளது என்றார். ஒரு நான்கு காய் கொடுங்கள் கொண்டு போய் வீட்டிலே குழம்பு வைக்க சொல்கின்றேன் என்றார்.

அய்யய்யோ! கத்தரி காய் எல்லாம் முத்திப்போய்விட்டதே என்ன செய்வது என்றார் அவர்.அவர் முகத்தை தொங்கப்போட்டுக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்தார். வழியிலே அந்த ஊர்காரரைப்பார்த்தார். ஏங்க அதோ அந்த வீட்டுத் தோட்டத்திலே கத்தரிக்காய் எல்லாம் முத்திப் போய்விட்டதா? என்று விசாரித்தார். உண்மையை தெரிந்து [illegible] அவர் காய் முத்தவில்லை சார் கலிமுத்திப் போய்விட்டது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலங்காரா நல்லூரா

## நல்லூர் ஆலய கார்த்திகைத் திருநாளில் நினைமின் மனனே! நினைமின் மனனே அலங்கார வேல் நல்லூரா செம்பொன்னம்பலவனே அம்பலத்தரசனை ஆனந்தக் கூத்தனை சங்காரவேல் எனப்போற்றி வணங்குவோம்



**"உரத்துறை போதத் ...... தனியான**
**உனைச்சிறி தோதத் ...... தெரியாது**
**மரத்துறை போலுற் ...... றடியேனும்**
**மலத்திருள் மூடிக் ...... கெடலாமோ**
**பரத்துறை சீலத் ...... தவர்வாழ்வே**
**பணித்தடி வாழ்வுற் ...... றருள்வோனே**
**வரத்துறை நீதர்க் ...... கொருசேயே**
**வயித்திய நாதப் ...... பெருமாளே"**

788 ஆவது திருப்புகழ் தினம் ஓதுவோம்.

உரத்துறை போதம் - வன்மைக்கிடமான ஞானத்தின் தனிப் பொருளான **அலங்காரா** உன்னைக் கொஞ்சமேனும் கந்தர் **அலங்காரம்** பாடி போற்றத் தெரியாமல் மரமாம் இடம் போல இருந்து அடியேனும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களின் இருள் மூடியும், காமம், குரோதம், வெகுளி என்னும் முக்குற்றமும் , பிராரத்தினவினை,சஞ்சிதவினை, ஆகாமியவினை ஆகிய மும்வினைகளால் அடியேன் நல்லூரா கெட்டு போகலாமா! மேலான நிலையில் உள்ள புனித நன்னெறி வாழ்க்கை, நற்கதி தரும் எம் செல்வமே நாம் நீராடி ஆசார சீலராகவும், ஆலயத்தில் முடியால் அசுத்தப்படாமல் முடியை முடிந்து உலர்ந்த சீருடைகள் அணிந்து பக்தியுடன், திருவாசகம், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி , திருவாசகம் ஓதி **உன் திருவடி பணிவித்து** வாழ்வு உறும்படி அருள்வாய் நல்லூரா. வரம் தரும் கருனையே உருவான **"அலங்கார வேல் நல்லூரா நீதியாகக் கொண்ட சிவனது ஒப்பற்ற குழந்தையே"** மேலான வைத்திய நாதராம் சிவபிராற்குப் பெருமாளே! அடியேன் மரத்திருள் மூடிக் கெடலாமோ கந்தா! சிறிதளவு சேகரித்து தெருக்களில் உலாவித்திரிந்து வீண் காலம் கழித்து நான் அவ்வாறு திரியாமல், நிந்தை மொழி ஒழியும்படி என்மீது அன்பு கூர்ந்து மேலான அருள் புரிந்து ஈசனே எம்பெருமானே என்றும் எந்தை பிரான், எண் திசைக்கும் எம்மை ஆளும், ஏதம் தீர்க்கும் தனிமுடி கவித்தாளும் இனியவன், தன்னை அடைந்தார்க்கு அருள்மிகு **"அலங்கார வேல் நல்லூரா" எங்கள் மனம் உங்களது திரு வடியில் உங்களது கருனை வேல் எங்களது உள்ளத்தில்.**

**எம் உள்ளமானது எக்காலத்திலும் நினைக்கவும், கைதொழவும், நாக்கு போற்றித் துதிக்கவும், திருநாமத்தை ஓதி திருவடியைப் பரவவும் உங்களது கருணையால் எமது துன்பம் வினையாவும் நீங்கவும் மறுமையில் பிறவித்துன்பத்தையும் பாவங்களையும் நீக்கி அருள் புரிவதுடன் முத்திப் பேற்றினையும் அடைந்து சிவானந்த பேரின்பத்தில் திளைத்திருப்போம்.**

(சி-1047)

க.கு.க சிவபாலன் (K.K.K)
காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்
மாணிக்கவாசகர் மடலாயம்



மன்னார் மாவட்ட இளைஞர்களால் சிரமதானப்பணி நேற்று முன்தினம் சனிக்கிழமை மன்னார் கோந்தப்பிட்டி கடற்கரையை அண்டிய பகுதியில் மேற்கொள்ளப்பட்டது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் செயற்பாட்டாளர் பிரியந்தா ஏற்பாட்டில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட இணைப்பாளர் பெனடிக் குரூஸ் தலைமையில் குறித்த சிரமதான பணி இடம்பெற்றது. (படம்: யோசப்நயன்)




கிளிநொச்சி வடக்கு வலய முன்பள்ளி ஆசிரியர் களுக்கான நாடகப் பயிற்சிபட பட்டறை நேற்று முன்தினம் நடைபெற்றது. வடக்கு, கிழக்கு மறுவாழ்வு மையத்தின் அனுசர ணையில் கிளிநொச்சி வடக்கு வலய கண்டாவளை கோட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான நாடகப் பட்டறை கிளிநொச்சி தருமபுரம் இல 1 அ.த.க பாடசாலையில் நடைபெற்றது.கிளிநொச்சி வடக்கு வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் பொ.விஜயநாதன். கிளிநொச்சி மத்திய கல்லூரியின் உப அதிபர் ப.சசிறதன் ஆகியோரும் வள வாளர்களாக கலந்து கொண்டனர். (படம்: கிருஷ்ணகுமார்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## உத்தமமாகாணி / வேலிப்பருத்தி

**Botanical Name-Pergwaris daemia**
**Family- Asclepiadaceae**






டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பல்லாண்டு காலம் வாழக்கூடிய ஏறுகொடித் தாவரமாகும். இச்செடியின் இலைகளை கசக்கும்போது ஒரு வித மணம் வீசும். இலைகளை ஒடிக்கும் போது பால் சுரப்புத் தன்மையைக் கொண்டது. இருபாலான பூக்கள், குழாயுருவான காய்கள் 5-6.5 செ.மீ நீளமுடையது. மென்மையான முட்களைக் கொண்டது. காய்கள் முற்றியவுடன் அதனுள் இருக்கும் விதை ஒவ்வொன்றிலும் சிலிர்க்கும் பஞ்சுக்கம்பி இருக்கும். அதன் மூலம் அவ்விதைகள் காற்றிலே பறந்து சென்று வேலியோரங்களிலும், முட்புதர்களிலும் விழுந்து தம் இனத்தை பெருக்குகின்றன. அதனால் தான் இந்த மூலிகையை வேலிப்பருத்தி என்று அழைக்கப்படுகின்றது. இதன் இலைகள் முழுச்செடி, காய்கள், அனைத்துமே மருத்துவ குணங்கள் மிக்கவை. பொதுவாக இம் மூலிகையை குடற்புழுக்கள் நீங்க சளியை வெளியேற்ற, பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் ஏற்படும் கோளாறுகளிற்கு பொதுவாக ஏற்படும் சூதகத்தடை, மாந்தம், செரியாமை, செரியாக்கழிச்சல் போன்ற நிலைமைகளிற்கு சிறந்த பலனைக் கொடுக்கும்.

அதிகமாக அடிக்கடி ஏற்படும் வயிற்று வலிக்கு உத்தம மாகாணி இலைச்சாறு ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து ஒரு கரண்டி தேன் கலந்து காலையில் மட்டும் 3 நாட்கள் தொடர்ந்து கொடுக்க குணமாகும். மாதவிடாயின் போது ஏற்படும் வயிற்றுவலி, இடுப்பு வலிக்கு உத்தம மாகாணி இலைச்சாறு 10 மில்லியுடன் தேன் 10 மில்லி கலந்து கொடுத்து வெந்நீர் அருந்த வலி நிற்கும். உத்தம மாகாணி இலைகளை நைய இடித்து சாறு எடுத்து அதை வீக்கமுள்ள இடத்தில் கனமாக பூசி வந்தால் எந்த வகையான வீக்கமானாலும் தனிந்து விடும். குழந்தைகளுக்கு ஏற்படும் சளிக்கு இலைச்சாறு 2 தொடக்கம் 3 துளி, பால் 15 மில்லி கலந்து கொடுக்க குணமாகும். ஆமணக்கு எண்ணெயில் 2-3 துளி இலைச்சாறு மசித்து கொடுத்தாலும் வயிற்றிலுள்ள கீரிப்பூச்சிகள் அழியும். இலைச்சாறு 100 மில்லி நல்லெண்ணெய் 100 மில்லி சேர்த்து சாறு சுண்டகாய்ச்சி வடித்து வைக்கவும். இதில் 5 மில்லி உள்ளுக்கும் கொடுத்து மேற்பூச்சாகவும் மூட்டுவலிக்கு பயன்படுத்தலாம். உத்தமமாகாணி பூக்களையும், இலைகளையும் சேகரித்து சுத்தம் செய்து சாறு எடுத்து சம அளவு தேன் கலந்து காலை, மாலை அருந்த இளைப்பு நோய் அதா வது ஆஸ்மா தணியும். உத்தம மாகாணி இலைகளை சேக ரித்து நன்றாக கழுவி சுத்தம் செய்து கைபிடியளவு எடுத்து ஒரு சட்டியில் போட்டு ஒரு டம்ளர் நீர்விட்டு அடுப்பில் வைத்து நன்றாக கொதிக்க வைத்து வடிகட்டி இரவு சாப் பாட்டின் முன் 3 நாட்களுக்கு கொடுத்து வந்தால் வயிற்றி லுள்ள குடற்புழுக்கள் அழிந்து விடும். மூட்டுவலி, முடக்கு வாதம், இடுப்புவலி முதலிய நோய்களால் அவதிப்படுவோர் வேலிப்பருத்தி இலைகளை சிதைத்து வாயகன்ற சட்டியிலிட்டு வதக்க வேண்டும். அதை நோயாளிக்கு தாங்கிக் கொள்ளும் அளவு சூட்டில் பொட்டணியாகக் கட்டி ஒற்றடம் கொடுத்து வந்தால் மேற்கூறிய வலிகள் தணியும்.

ஏதாவது விஷயந்துகள் தீண்டினால் வேலிப்பருத்தி இலைச்சாறு 60 மில்லி அளவு தினமும் மூன்று வேளை நச்சுக்குறி, குணங்கள் குறையும் வரை கொடுக்கலாம். ஓர் அகன்ற பீங்கான் தட்டில் தேவையான அளவு மிளகைக் கொட்டிப் பரவலாக பரப்ப வேண்டும். மிளகுகள் மூழ்கும் வரை உத்தம மாகாணி இலைகளை இடித்து பிழிந்த சாற்றை தளர ஊற்ற வேண்டும். அதை 24 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின்பு வெயிலில் நன்றாக சாறு வற்றிப்போகும்படி காயவைக்க வேண்டும். அவ்வாறு மும் முறை செய்த பின்பு ஈரமில்லா மல் நன்றாக உலர்ந்த மிளகை உரலில் இட்டு இடித்து தூளாக்கி அரித்துப் பத்திரப்படுத்திக் கொள்ளவும். குழந்தைகளுக்கு ஏற்படும் செரியாமை, வாந்தி, காய்ச்சல், சளி உபாதை போன்ற நிலைமைகளில் மேற்படி உத்தமமாகாணி மிளகுச் சூரணத்தை 25-50 மில்லிக் கிராம் அளவு தேனில் குழைத்து 3 நாட்கள் கொடுத்து வர குணமாகும். இதன் காய்கள் வாய்ப்புண் மற்றும் சளிக்குச் சிறந்தது. இதன் காய்களை உணவுக்கூறாகப் பயன்படுத்த முடியும். உத்தம மாகாணி ஏறு கொடிகள் வேலிகளில் படர்ந்து செழிப்பாக வளரும் இடங்களில் ஏராளமான காய்களுடன் காணப் படும்.

அத்தருணம் காய்களை சேகரித்து நெருக்கு வெட்டாக பிளந்து உள்ளிருக்கும் விதைகளை நீக்கி பின்பு காய்களை குறுக்காக அரிந்து நன்றாக கழுவி வடித்து ஒரு மண் சட்டியில் போட்டு மூழ்கும் படி நீர்விட்டு மஞ்சள் தூள், தேவையான அளவு உப்பு சேர்த்து மூடி வேகவிடவும். நன்றாக வெந்ததும் காய்களை வடித்து எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். பின்பு ஒரு வாணலியை அடுப்பேற்றி சிறி தளவு நல்லெண்ணெய் ஊற்றி அதில் தேவையான அளவு கடுகு, அரிந்த வெங்காயம், உள்ளி, கறிவேப்பிலை, பச்சை மிளகாய் போட்டு வெந்து வதங் கியதும் வெட்டிய காய்களை போட்டு கிளறிய பின்பு தேங்காய்ப்பூவும் சேர்த்து வெந்ததும் இறக்கி சாப்பிடவும். இதை மாதத்தில் 2,3 தடவைகள் செய்து சாப்பிட்டால் வாய்ப்புண் மற்றும் இருமலுக்கு சிறந்த பத்திய உணவாக அமைந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








"இல்லை, இல்லவே இல்லை! அவளுடைய காதலர்களை அவளே எனக்குக் காட்டினாள். நள்ளிரவில் கோடிக்கரைச் சதுப்பு நிலத்தில் கிளம்பும் கொள்ளிவாய்ப் பிசாசுகளை எனக்குக் காட்டினாள். அவர்கள் தான் தன்னுடைய காதலர்கள் என்று சொன்னாள்."

"அவள் பாக்கியசாலி! ஏனெனில் அவளுடைய காதலர்கள் ஒளிவடிவம் பெற்றிருக்கிறார்கள். பிரகாசமாகக் கண்முன் தோன்றுகிறார்கள். என்னுடைய காதலர்களோ இருள் வடிவமானவர்கள்! உருவம் அறிய முடியாதவர்கள். இருள் அடைந்த பாழும் மண்டபத்தில் நீர் எப்போதாவது நள்ளிரவு நேரத்தில் படுத்திருந்ததுண்டா? வௌவால்களும், ஆந்தைகளும் இறகுகளைச் சடபட வென்று அடித்துக்கொண்டு அந்த இருண்ட மண்டபங்களில் உருத்தெரியாத வடிவங்களாகப் பறந்து திரிவதைப் பார்த்ததுண்டா? அம் மாதிரி வடிவங்கள் என் உள்ளமாகிய மண்டபத்தில் ஓயாமல் பறந்து அலைகின்றன. இறகுகளை அடித்துக் கொள்கின்றன.

என் நெஞ்சைத் தாக்குகின்றன. என் கன்னத்தை இறகுகளால் தேய்த்துக் கொண்டு செல்கின்றன! அந்த இருள் வடி வங்கள் எங்கிருந்து வருகின்றன? எங்கே போகின்றன? ஏன் என்னைச் சுற்றிச் சுற்றி வட்டமிடுகின்றன? ஐயோ! உமக்குத் தெரியுமா?" இவ்விதம் கூறி விட்டு நந்தினி வெறி கொண்ட கண்களால் அங்குமிங்கும் பார்த்தாள்.

வந்தியத்தேவனுடைய வயிர நெஞ்சமும் கலங்கிப் போயிற்று. ஒரு பக்கம் இரக் கமும், இன்னொரு பக்கம் இன்ன தென்று தெரியாத பய மும் அவன் மனத்தில் குடி கொண்டன.

"தேவி! வேண்டாம்! கொஞ்சம் சாந்தி அடையுங்கள்!" என்றான். "என்னைச் சாந்தி அடையும்படி சொல்வதற்கு நீர் யார்?" என்று கேட்டாள் நந்தினி.

"நான் வாணர் குலத்தில் வந்த ஏழை வாலிபன். தாங்கள் யார் தேவி!" "நான் யார் என்றா கேட்கிறீர்? அது தான் எனக்கும் தெரியவில்லை. அதைக் கண்டுபிடிக்கத்தான் முயன்று கொண்டிருக்கிறேன். நான் யார் மானிடப் பெண்ணா? அல்லது பேயா, பிசாசா என்று கேட்கிறீரா?"

"இல்லை, இல்லை! தெய்வ லோகத்திலிருந்து தவறி விழுந்த தேவப் பெண்ணாகவும் இருக்கலாம் அல்லவா? தெய்வ சாபத்தினால்"

"ஆம்! தெய்வ சாபம் என் பேரில் ஏதோ இருக்கிறது. அது என்னவென்று மட்டும் தெரியவில்லை. நான் யார், எதற்காகப் பிறந்தேன் என்பதை அறிவேன். இதுவரையில் ஒரே ஒரு சூசகத்தை மட்டும் தெய்வம் எனக்கு அளித்திருக்கிறது.

இதோ பாரும்!" என்று கூறி நந்தினி அவள் அருகில் இருந்த வாளை எடுத்துக் காட்டினாள், புதிதாகச் செப் பனிடப்பட்ட அந்தக் கூரிய வாள் தீப வெளிச் சத்தில் பளபள வென்று ஜொலித் துக் கண்ணைப் பறித்தது.

வந்தியத்தேவன் அந்த வாளைப் பார்த்தான். பார்த்த உடனே அது கொல்லன் பட்டறையில் தான் பார்த்தவாள் என்பதைத் தெரிந்து கொண்டான். இதுவரையில் நந்தினியின் வார்த்தைகளாகிற விஷ பாணங்களினால் அவன் துடிதுடித்துக் கொண்டிருந்தான். இப்போது இரும்பினால் செய்த வாளாயுதத்தைப் பார்த்ததும் அவனுடைய மனம் திடப்பட்டது. ஏனெனில் வாள், வேல் முதலிய ஆயுதங்கள் அவனுக்குப் பழக்கப்பட்டவை. பிறந்தது முதல் அவனு டன் உறவு பூண்டவை, ஆகையால் பயமில்லை. நந்தினி அந்த வாளைத் தன் பேரில் பிரயோகிப்பதாயி ருந்தாலும் பயம் கிடை யாது!

"தேவி! பார்த்தேன்! வாளைப் பார்த்தேன். வேலைப்பாடு அமைந்த வாள்! அரச குலத்துக்கு உரிய வாள். வீராதி வீரர்களின் கைக்கு உகந்த வாள். அது மெல்லியல் கொண்ட தங்கள் அழகிய கையில் எப்படி வந்தது? அதன் மூலம் தெய்வம் தங்களுக்கு அளித்திருக்கும் சூசகந்தான் என்ன?" என்று கேட்டான்.

(தொடரும்)






## தந்திரவாணன் செய்த தந்திரம்

(நேற்றைய தொடர்ச்சி...)

நகரத்துக்கு வெகு தொலைவில் இருந்தான் தந்திரவாணன்.

ஊழலில் ஈடுபட்ட அமைச்சன் ஒருவன் தந்திரவாணன் வீட்டைத் தேடிச் சென்று, "அரசருடன் பேசும் பொழுது, என்னைப் பார்த்து சிரித்தீர்களே, என் ஊழல் தெரிந்து விட்டதா" என தயங்கியபடியே கேட்டான்.

"அரசர் மிக கோபமாக இருக்கிறார், உமக்காக நான் பரிந்து பேசிப் பார்க்கிறேன். எதற்கும் கவலை வேண்டாம்" என்று சாமர்த்தியமாகச் சொன்னான் தந்திரவாணன்.

அமைச்சன், உடனே மூவாயிரம் பவுனை அவனிடம் கொடுத்து, "எப்படியாவது என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று அவனை வணங்கி, வேண்டிக் கொண்டு சென்றான்.

இப்படியாக, தினமும் அரசனிடம் சென்று, அரச சபையில் இருந்த ஒவ்வொருவரையும் பார்த்துச் சிரித்து, அரசனிடமும் ஏதாவது பேசிவிட்டுச் சென்றான் தந்திரவாணன்.

பிறகு, அமைச்சர்கள், அதிகாரிகள் பலரும், தனித்தனியாக தந்திரவாணனைத் தேடிச் சென்று, நிறைய பவுன்களைக் கொடுத்து, தங்களைக் காப்பாற்றும்படி வேண்டிக் கொண்டனர்.

பல நாட்கள் கழிந்தன. அரசவையிலிருந்து பெரும் பாலானவர்கள் தந்திரவாணனிடம் வந்து நிறையப் பவுன்களைக் கொடுத்து, வேண்டிக் கொண்டனர்.

தந்திரவாணன் எதிர்பார்த்ததற்கும் அதிகமாகவே, பொருள் சேர்ந்துவிட்டது. ஆகையால், தான் செய்த தந்திரம் ஒரு சமயம் அரசனுக்குத் தெரிந்து விட்டால், தனக்கு ஆபத்தாகிவிடுமே என்று யோசித்து முன் எச்சரிக்கையாக நடக்க எண்ணினான்.

அரசனை தனிமையில் சந்தித்து, தான் செய்த தந்திரத்தை விவரமாகக் கூறி, கிடைத்தவற்றில் பாதியை அரசனிடம் சேர்ப்பித்து, தன்னை மன்னிக்கும் படி வேண்டினான். தந்திரவாணன்.

அரசன் நடந்தவற்றைப் பார்த்தால், ஊழல் செய்யாதவர்கள் மிகவும் குறைவு என்று தெரிகிறது. என்றான். மேலும், தந்திரவாணனின் துணிவையும் சாமர்த்தியத்தையும் பாராட்டி மகிழ்ந்தான்.

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்று கூறுவார்கள்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை தன்னைச் சரியான நேரத்தில் தானே வெளிப்படுத்திக்கொள்ளும் திறன் கொண்டது.
- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிறிதுங்க ஜெயசூரிய ஒரு யதார்த்தவாதி

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும் என்பார் இராமலிங்க சுவாமிகள்.

ஆம், இந்த உலகில் மிக மோசமான அதர்மம், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதாகும்.

இவ்வாறு உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களைப் பொய்யர்கள் என்று யாரும் கூறுவதில்லை.

ஏனெனில் பொய்க்குள்ளும் ஓர் அறம் இருக்க முடியும்.

அதனாலேயே *பொய்மையும் வாய்மையிடத்து...* என்றான் தெய்வப் புலவன் வள்ளுவன்.

ஆக, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்கள் வஞ்சகர்கள். இவர்கள் துரோகம் இழைக்க வல்லவர்கள். அதனாலோ *என்னவோ... வஞ்சகர் போயகல...* எனத் திருப்பல்லாண்டு தந்தருளிய சேந்தனார் செப்பி நின்றார்.

ஆம், நம் நாடு இந்தளவு தூரம் கந்தறுந்து காவடி எடுப்பதற்கு ஆட்சியாளர்களிடம் இருந்த வஞ்சகத்தனமே மூலகாரணம் எனலாம்.

உண்மை. நாட்டை ஆளுகின்ற தலைவன் நேர்மையுள்ளவனாக இருக்க வேண்டும்.

உதாரணத்துக்கு இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்று கூறினால், அதனைச் செய்து முடிப்பது ஆட்சித் தலைவனின் தார்மீகக் கடமை.

ஆனால் நம் நாட்டில் ஆட்சியில் இருந்தவர்கள்; இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் எனக் கூறினார்கள். ஆனால் அவர்கள் அதனைச் செய்யவில்லை.

அவ்வாறு செய்யாமல் போனமைக்குப் புறக்காரணிகள் காரணமன்று. மாறாக, இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில்லை என்ற மனநிலையில் இருந்துகொண்டு இனப் பிரச்சினையைத் தீர்ப்போம் என்றால் அது நடக்குமா என்ன?

ஆக, இந்த நாட்டின் அரசியல்வாதிகளில் அநேகர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களாக உள்ளனர்.

அதிலும் தேர்தல் காலங்களில் தென்பகுதியில் ஒரு விதமாகப் பேசுவது. வடக்குக் கிழக்கில் வேறுவிதமாக உரையாற்றுவது என்ற கபடத்தனம் அரசியல்வாதிகளிடம் நிறைந்திருந்தது.

இவ்வாறான சூழ்நிலையில், 39 ஜனாதிபதி வேட்பாளர்களில் ஐக்கிய சோசலிசக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சிறிதுங்க ஜெயசூரிய, ஓர் உண்மையை – யதார்த்தத்தைப் பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

ஆம், இந்த நாட்டின் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது தமிழ் மக்கள் தங்களைத் தாங்கள் ஆள்வதாக இருக்க வேண்டும்.

அவ்வாறு தமிழ் மக்கள் தங்களைத் தாங்கள் ஆள்வதாக இருந்தால், அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை தேவை.

13ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தம் தமிழ் மக்களுக்கான உரிமையை ஒருபோதும் உறுதி செய்யாது எனப் பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

இவ்வாறு கூறியதன் மூலம் தென்பகுதியில் தனக்கு எதிர்ப்பு ஏற்படும் என்ற உண்மை தெரிந்திருந்தும் யதார்த்தத்தைப் பேசவேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் அவர் இனப் பிரச்சினைக்கான தீர்வு எது என்பதைப் பகிரங்கமாக முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெல்வது, தோற்பது என்பது வேறு விடயம்.

ஆனால் உண்மையை உண்மையாகச் சொல்வது கட்டாயமானது. அதுதான் தர்மம். அதை சிறிதுங்க ஜெயசூரிய கூறியுள்ளார்.

அதற்காக அவரை நாம் நிச்சயம் பாராட்ட வேண்டும்.

## உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பெயரைப் பயன்படுத்தி மோசடி

### எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தல்

*(கொழும்பு)*

உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் எனும் போர்வையில் சில மோசடிக் குழுக்கள் வர்த்தக நிலையங்களுக்குச் சென்று வரிப்பணத்தை வசூலிப்பதாகத் தொடர்ச்சியான முறைப்பாடுகள் கிடைப்பதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, பாணந்துறை, நீர்கொழும்பு, வென்னப்புவ, மினுவாங்கொடை ஆகிய பகுதிகளில் இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளதென திணைக்களத்தின் மத்திய குழு குறிப்பிட்டுள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் வரி வகைகள் தொடர்பான வரிப்பணத்தை அரச வங்கிகளில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பெயரில் பராமரிக்கப்படும் கணக்குகளில் மாத்திரம் வைப்பிலிடுமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் வரி செலுத்துவோரை அறிவுறுத்தியுள்ளனர்.

மாறாக பணம் அல்லது காசோலைகள் எதுவும் வசூலிக்கப்படமாட்டாது எனவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெளிவுபடுத்தியுள்ளது.

இதனைக் கவனத்திற்கொண்டு செயற்படுமாறும் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துமாறும், அத்தகைய மோசடிக்காரர்களிடம் சிக்கியிருந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கோரியுள்ளது. (ந-7)

### மட்டு, யாழைச்சேர்ந்த

## சுகாதாரப் பரிசோதகர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

களுத்துறை, அவித்தாவ ஒலகந்த எத்தாவெட்டுனுவலப் பகுதியில் பொதுச்சுகாதாரப்பரிசோதகர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

மொரட்டுவைப்பிரதேசத்தைச் சேர்ந்த டெங்குக் கட்டுப்பாட்டு உதவியாளர்கள் மற்றும் நான்கு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் நேற்றுக் காலை நீராடச்சென்றுள்ளனர்.

இதன்போது மொரட்டுவை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கடமையாற்றும் எஸ். கௌதம் மற்றும் எஸ். ஹர்ஷநாத் ஆகிய இரு பொதுச்சுகாதார உத்தியோகத்தர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பைச் சொந்த இடமாகக்கொண்டவர்கள் எனத் தெரியவருகிறது.

பிரேத பரிசோதனை இன்று நடைபெறவுள்ளதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

### தேர்தல் விஞ்ஞாபனம்

## அநுர இன்று சஜித் நாளை மறுநாள்

*(கொழும்பு)*

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை கொழும்பில் இன்று வெளியிடவுள்ளார்.

காலை 10.00 மணிக்கு தலவத்துகொட மொனார்க் இம்பீரியல் ஹோட்டலில் நடைபெறும் வைபவத்தின் போது தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படும் என தேசிய மக்கள் சக்தியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை நாளை மறுதினம் புதன்கிழமை வெளியிடவுள்ளார்.

தேர்தல் விஞ்ஞாபனம் கொழும்பில் வெளியிடப்படும் என்றும், ஆனால் நேரம் மற்றும் இடம் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் நடவடிக்கைகளின் தலைவர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார். (ந-7)

## வரதராஜப்பெருமாளுக்கு நாளை இரதோற்சவம்

(பொன்னாலை)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலய வருடாந்த மகோற்சவத்தில் தேர்த்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 9.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையினைத் தொடர்ந்து எம்பெருமான் முற்பகல் 11.30 மணியளவில் இரதத்தில் ஆரோகணித்து அருள்பாலிக்கவுள்ளார்.

இதேவேளை கிருஸ்ணஜெயந்தி உற்சவமானது பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெறும். மாலை விசேட கலை நிகழ்வுகளும் நள்ளிரவு கிருஸ்ணஜெயந்தி தாலாட்டும் இடம்பெறவுள்ளது. (ந-7)

## மின்சாரம் தாக்கி மாணவன் பலி

கலேன்பிந்துனுவெவ தேசிய பாடசாலையில் கல்வி கற்கும் உல்பத்கம பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

வீட்டின் பின்புறம் உள்ள தண்ணீர் குழாயில் குளித்துக் கொண்டிருந்த போது அருகில் இருந்த மோட்டரின் வயர் கழன்று மாணவனின் உடலில் பட்டதில் மின்சாரம் தாக்கி குறித்த மாணவன் உயிரிழந்ததாகத் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கலேன்பிந்துனுவெவப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## நாட்டில் மீண்டும் எலிக்காய்ச்சல்

### சுகாதாரத்துறை எச்சரிக்கை

*(கொழும்பு)*

மழையுடனான காலநிலை மற்றும் வெள்ளப்பெருக்குக் காரணமாக வாந்தி, வயிற்றுப்போக்கு, காய்ச்சல், எலிக்காய்ச்சல் போன்ற நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் உரிய சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிப்பது அவசியமாகும் எனச் சுகாதாரப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் இலங்கையில் சுமார் 5,000 எலிக்காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் இரத்தினபுரி, காலி, கேகாலை, மாத்தறை, களுத்துறை, மொனராகலை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் அதிக ஆபத்து உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

தசை வலி, தலைவலி, காய்ச்சல் மற்றும்வாந்தி போன்ற அறிகுறிகள் இருந்தால், முறையான மருத்துவ ஆலோசனையைப் பெறுவது கட்டாயமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோற்றுக் கொண்டிருக்கும் அரசியல் தீர்வு பேச்சுவார்த்தைகளும் தோற்காத அரசியல் தீர்வு யோசனைகளும்

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

07

உதாரணமாக மாகாண சபைக்கு காணி அதிகாரம் உண்டா? இல்லையா? என்பதனை சாதாரண மக்களுக்கும் விளங்கக்கூடிய வகையில் எவரும் விளக்கமளிக்கிறார்கள் இல்லை. மாகாண சபைக்கு காணி அதிகாரம் கிடையாது என்று ஒரு சாரார் கூறுகின்றனர். காணி அதிகாரத்தைப் பறிக்கவேண்டும் என்று இன்னொரு சாரார் கூறுகின்றனர். காணி அதிகாரம் வழங்கப்பட மாட்டாது என்று ஒரு சாரார் கூறுகின்றனர். நீங்கள் வழங்கத் தேவையில்லை அது ஏற்கனவே இருக்கின்றது என்று மற்றுமொரு சாரார் கூறுகின்றனர்.

சில வருடங்களுக்கு முன் ஒரு நீதிமன்றம் மாகாண சபைக்கு காணி அதிகாரம் இல்லை என்று தீர்ப்பளித்தது. அதனை எதிர்த்து மேற்கொள்ளப்பட்ட அப்பீலை ஆராய்ந்த நீதிமன்றம் காணி அதிகாரம் இருக்கின்றதென்று தீர்ப்பளித்தது. அதனை எதிர்த்து மேற்கொள்ளப்பட்ட அப்பீலை ஆராய்ந்த உயர் நீதிமன்றம் மாகாண சபைக்கு காணி அதிகாரம் இல்லை என்று தீர்ப்பளித்தது.

இது ஒரு விவாதப்பொருள். தீர்வு கிடைப்பது எளிதல்ல. 13ஆம் திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வழங்கப்பட்ட அதிகாரங்களில் விளக்கமில்லாப் பகுதிக்கு நியாயத்தின் அடிப் படையில் தெளிவான விளக்கத்தைக் கொடுக்கப்போவது யார்? ஒரு சமூகம் எப்போது மற்றைய சமூகத்தின் நியாயத்தைப் பற்றி சிந்திக்கிறதோ அன்று தான் இப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். இது நடக்குமா?

## இப்போது நினைத்தாலும் சட்டத்தை இயற்றி வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைக்க முடியும்

2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தினக்கதிர் (Thinakkathir.com) இணையத்தில் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா அவர்கள் "வடக்கு, கிழக்கு பிரிப்பதற்கு ஜனாதிபதிகள் தான் காரணம்" என்று கூறியதாக கருத்து வெளியிடப்பட்டிருந்தது. அதில் கூறப்பட்டிருந்ததாவது வடக்கு-கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டதற்கு காரணம் முன்னர் ஆட்சியில் இருந்த அரசுத்தலைவர்கள் தான் என வடக்கு-கிழக்கு மாகாணத்தை பிரிப்பதற்கான நீதிமன்ற உத்தரவை பிறப்பித்த முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா அவர்கள் கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தை இணைப்பது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதை ஆட்சியில் இருந்து வந்த அரசுத்தலைவர்கள் அனைவரும் திட்டமிட்டு வருடந்தோறும் பிற்போட்டு வந்தனர்.

அதனால் அந்த இணைப்பு சட்ட விரோதமானதாக இருந்தது. இணைப்பை அவர்கள் உண்மையில் விரும்பி இருந்தால் பாராளுமன்றத்தில் சட்டத்தை இயற்றி அதனைச் செய்திருக்க முடியும்.

எந்தவொரு அரசுத்தலைவரும் அப்படிச் செய்யாமல் விட்டது தான் நீதிமன்றத்தின் முன் இந்த விவகாரம் வந்தபோது பிரச்சினைக்குரியதாக அது மாறியது என அவர் தெரிவித்தார். அதனால் தான் சட்டப்படி அதனைப் பிரிக்க வேண்டியிருந்தது. இது அரசியல் வாதிகள் விட்ட தவறு. அவர்கள் இப்போது நினைத்தாலும் சட்டத்தை இயற்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்க முடியும் என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா அவர்கள் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றமானது சட்டத்தின் மூலம் அடுத்துள்ள இரண்டு அல்லது மூன்று மாகாணங்களை தனியொரு முதலமைச்சரைக் கொண்ட தனியொரு மாகாண சபையாக இணைக்கலாம் என்பதை பதின்மூன்றாவது திருத்தமானது அரசியலமைப்பில் நிரந்தரமானதாக சேர்த்துள்ளது.

வடக்கு, கிழக்கு இணைப்பைப் பிரிக்கும் வகையில் உயர்நீதிமன்றத்தால் 2006 இல் வழங்கப்பட்ட தீர்ப்பானது வடக்கு, கிழக்கு இணைப்புப் பற்றிய ஏற்பாடுகளைக் கொண்டிருந்த மாகாண சபைகள் சட்டத்திலுள்ள நிபந்தனைகளுக்கு மாறாக அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி வடக்கு, கிழக்கு இணைப்பை நீடித்துச் சென்றமையானது அரசியலமைப்பிற்கு மாறானது என்பதாக மட்டுமே இருந்தது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பது அரசியலமைப்பிற்கு மாறானது என்பதாக உயர்-நீதிமன்றத்தின் தீர்ப்பு அமைந்திருக்கவில்லை.

அடுத்துள்ள மாகாணங்களை ஒரே மாகாணசபையாக இணைப்பது என்பது இன்னமும் அரசியலமைப்பின் பாகமாகவே இருந்து வருகின்றது. வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பாக பாராளுமன்றத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற வேண்டிய அவசியமோ அல்லது சர்வஜன வாக்கெடுப்பிற்குச் செல்ல வேண்டிய அவசியமோ இல்லை.

பாராளுமன்றமானது சாதாரண பெரும்பான்மை மூலம் இருந்து வரும் மாகாணசபைகள் சட்டத்தை திருத்துவதன் மூலம் அல்லது புதிதாக ஒரு சட்டத்தை ஆக்குவதன் மூலம் இதனைச் செய்யலாம்.

இன்றைய அரசாங்கம் அரசியலமைப்பில் இல்லாததனை தருவதாக கூறி காலங்கடத்துவதனை விட ஏற்கனவே அரசியலமைப்பில் பதின்மூன்றாவது திருத்தத்தால் உள்ளடக்கப்பட்டுள்ள மாகாணங்களின் இணைப்பு, மாகாண சபைகளுக்கான காணி அதிகாரம் மற்றும் பொலிஸ் அதிகாரம் என்பவைகளை உள்ளவாறாக முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் இனப்பிரச்சினை தீர்வுக்கான ஆரம்பப்படி நிலைகளையாவது கட்டியெழுப்புவதாக அமையும்.

## திருமதி சிறிமாவோ பண்டார நாயக்க ஜனாதிபதித் தேர்தலுக்கென முன்வைத்த அதிகாரப் பகிர்வுவேலைத் திட்டம் - 1988

ஸ்ரீ.ல.சு.க. மக்கள் ஐக்கிய முன்னணி (MEP) ஸ்ரீ.ல.முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் ஒருங்கிணைந்து ஜனநாயக மக்கள் கூட்டமைப்பை உருவாக்கின. (24.11.1988)

- மேற்படி ஜனநாயக மக்கள் கூட்டமைப்பு அதிகாரப் பகிர்வை ஏற்றுக்கொண்டது. வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அம்பாறை மாவட்டத்தை உள்ளடக்கிய முஸ்லிம் அலகு,
- அனைத்து அலகுகளிலும் வாழும் சகல தனிநபர்களினதும் உரிமைகள் பூரண சமத்துவத்தின் கீழ் அங்கீகரித்தல்,
- மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண அலகுகளுக்கும் தனித்தனி விடயப்பரப்புக்கள் ஒதுக்கப்படும்,
- பிரஜா உரிமை தொடர்பான தடைகள் நீக்கப்படும்.
- பிராந்திய பொலிஸ் திணைக்களம் பிராந்திய இனத்துவவிகிதாசாரத்திற்கு அமைய நிறுவப்படும்.
- சிங்களமும் தமிழும் அரசகரும மொழிகளாகும். ஆங்கிலம் தேசிய மொழியாகும்.

## மங்கள முனசிங்கா தெரிவுக்குழு அறிக்கை - 1991

பாராளுமன்றம் அங்கீகரித்த ஒரு தெரிவுக்குழு 1991.08.09 ஆம் திகதி நியமிக்கப்பட்டது. இந்த விடயத்தில் சகல கட்சிகளும் ஒன்றிணைந்தன. தீர்வுகள் குறித்து பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை அமைத்து தீர்வொன்றை முன்வைக்கும் பொறுப்பு அக்குழுவுக்கு வழங்கப்பட்டது. இந்தக் குழுவின் தலைவராக எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் இருக்க வேண்டும் என அப்போதைய ஜனாதிபதி பிரேமதாஸ தீர்மானித்தார். இதற்கமைய மங்கள முனசிங்க இந்தக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். இலங்கையின் நீண்டகால இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்பட வேண்டும், முரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மங்கள முனசிங்கா உறுதியாகவிருந்தார்.

திரு.மங்கள முனசிங்காவின் தலைமையில் 45 உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக்குழு பலமுறை கூடி ஆராய்ந்து பரிந்துரைகளை அறிக்கையிட்டுள்ளது.

## பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டன

(அ) வடக்கு கிழக்கு மாகாணங்களில் அதிகாரப் பகிர்வு பற்றிய பிரச்சினையையிட்டு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

(ஆ) தேசம் பிளவுபட்டுள்ளமை, அப்பாவி சாதாரணப் பிரஜைகள், ஆயுதமேந்திய படைகளின் உறுப்பினர்கள், ஓர் குறிக்கோளை அடைவதற்குப் போராடும் இளைஞர்கள் வீணாகக் கொல்லப்படுதல், எமது நாட்டில் பயப்பீதிக் கலாசாரம் யுத்த ரீதியாக வளர்ச்சியடைவதைத் தடை செய்தல் போன்ற விடயங்கள்

(இ) இயல்பு நிலையையும் அரசியல் ஸ்திரத்தன்மையையும் ஏற்படுத்துவதற்கு பாதுகாப்புச் செலவினங்களைக் குறைத்து துரித பொருளாதார வளாச்சிக்கும் தேசிய அபிவிருத்திக்கும் பயன்படுத்துதல்.

## தெரிவுக்குழு உறுப்பினர்களின் பெரும்பான்மையினர் உடன்பாடு கண்ட விடயங்கள் பின்வருமாறு:

(அ) வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு தனித்தனியான இரு அலகுகள் அமைத்தல்.

(ஆ) இந்திய அரசயாப்பில் குறிப்பிடப்படும் வகையிலான அதிகாரப் பகிர்வு முறையை அனுசரித்தல்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்டித்தனம்...

குறிகாட்டுவான் பகுதியில், கடற்படை முகாமுடன் இணைந்து காணப்படும் பொலிஸ் காவலரணில் நேற்று முன் தினம் இரவு மது போதையில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்த அரச உத்தியோகஸ்தர் ஒருவரை வழி மறித்து, ஆவணங்களைப் பார்வையிட்டுள்ளார். பின்னர் அவரிடம் லஞ்சம் கோரி வாய்த்தர்க்கப்பட்டு தாக்க முயற்சித்துள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்டவரால், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, மதுபோதையில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகஸ்தரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2024.08.25
சீட்டிழுப்பு இலக்கம் 5576
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
G 5 7 6 8 9 4
அத சம்பத
G 6 8 9 4
சீட்டிழுப்பு இலக்கம் 151
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.08.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1606
H 07 12 20 65 H
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
Double Chance 60108

மெகா பவர்
திகதி 25/08/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1924
N 08 09 50 57 63
Double Chance 92875

லக்கி 7 VIP
திகதி 2024.08.25
சீட்டிழுப்பு இலக்கம் 0402
S 5 2 4 9 1 5 S

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3818
சீட்டிழுப்பு திகதி 25.08.2024
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
S 13 29 41 54
S 91747
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.08.25
சீட்டிழுப்பு இலக்கம் 0885
மேஷம் 01 08 37 48 மேஷம்
தன யோக இலக்கம் 33541 தேசிய லொத்தர் சபை 05


## தபால்...

களின் விநியோக நடவடிக்கைகள் செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ந-7)

## சிந்துஜாவின்...

சாலையில் அண்மையில் இளம் தாய் சிந்துஜா குழந்தை பெற்ற நிலையில் சில நாட்களின் பின்னர் இரத்தப் போக்குக் காரணமாக மீண்டும் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் கவனிக்கப்படாத நிலையில் அவர் மரணமடைந்தார்.

இந்நிலையில் அவருடைய கணவர் தனது சொந்த ஊரான வவுனியா பனிக்கர் புளியங்குளத்தில் நேற்று முன்தினம் இரவு விபரீத முடிவெடுத்த நிலையில் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது அவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,285)

## 'சங்கு'...

சுகந்தனின் இரு நூல்கள் வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே குறித்த விடயத்தைத் தெரிவித்தார்."

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

இங்குள்ள தமிழர்களுக்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிஜம் எனச் சங்கே முழங்கு என்ற பாரதியாரின் கவி வரிக்கு அமைய சங்கு ஒரு காலத்தின் பதிவு.

சங்கே முழங்கடா! தமிழா ஒரு சாதனை படையடா! என்ற தமிழர் புரட்சிப் பாடல்களும் உண்டு.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது எமது காலத்தின் தேவையாகவுள்ளது. உங்களுடைய மனங்களில் அவற்றைப் பதிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (ந-7,113)

## தேர்தல்...

உள்ளிட்ட சமூக ஊடகங்களின் இயக்குநர்கள் கலந்து கொண்டதோடு தேர்தல் விதிமுறைகளை மீறிய பதிவுகள் நீக்கப்படும் என அவர்கள் ஆணைக்குழுவிடம் உறுதியளித்ததாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் தெரிவித்துள்ளார். (ந-7)

## யாழில்...

மேற்கொண்ட பொலிஸார், ஏறாவூரைச் சேர்ந்த குறித்த நபரைக் கைது செய்துள்ளனர்.

விசாரணைகளின் பின் சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

## வரி தொடர்பான...

பிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் நிலுவை வரிகளை வசூலித்து அரச வரு

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் உள்ளூராட்சித் தேர்தல் திகதி

## வெளியாகும் வாய்ப்பு - மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெறுவதற்கு முன்னதாக உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான திகதி தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய நம்பிக்கை வெளியிட்டார்.

ஊடகவியலாளர்களின் வகிபங்கை அர்த்தமுள்ள வகையில் அதிகரிக்கச் செய்ய வியூ (VIEW) அமைப்பால் விசேட பயிற்சி வேலைத் திட்டம் வடக்கு ஊடகவியலாளர்களுக்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய இதனைத் தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டதன் மூலம் மக்களின் அடிப்படை உரிமைகளை தேர்தல் ஆணையாளர் உள்ளிட்ட தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் மீறியுள்ளதாக உயர் நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)


வேலைவாய்ப்பு
யாழ்.நகரப் பகுதிகளில் உள்ள லொத்தர் விற்பனை நிலையங்களில் விற்பனை உதவியாளர்கள் தேவை.
பகுதிநேரமாகப் பணிபுரிய விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.
விரும்பின் தங்குமிடம், உணவு ஏற்பாடு செய்து தரப்படும்
077 843 5224
077 603 1723
(1786)


மானத்தை அதிகரிக்கச் செயற்பட்டதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், வரி நிலுவையை வசூலிப்பதற்காகச் சுமார் 900 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய இன்று வரி தொடர்பான அனைத்துத் தகவல்களும் ஊடகங்களுக்கு வெளியிடப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)


உத்தியோகபூர்வ முடிவுகள்
25.08.2024 வெற்றி வாரம் 284 வர்ணம் பழுப்பு
ஆங்கில எழுத்து R மற்றும் வெற்றி இலக்கம் 6 7 8 7 5 6
59271
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,734,596.00
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2550 ஆரஞ்சு நிறம்
சீட்டிழுப்பு திகதி 25.08.2024 தினம் ஞாயிறு
35 46 67 69 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,896,008,80
DLB

திகதி 2024.08.25 வெற்றி வாரம் 4711 வர்ணம் இளஞ்சிவப்பு
சனிதா
04 31 56 59 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,317,963.60
ரூ.100,000/- பணப்பரிசு 24070
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 520
2024.08.25
கபிலம்
வெற்றி இலக்கங்கள் 02 13 27
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,347,440/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4262 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.08.25 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 08 21 43 61 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,828,752.80
178170
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 36 04 07 40 49
சுப்பர் இலக்கம்
1726
மஞ்சள்
25.08.2024 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 541,002,958.60
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2376
சீட்டிழுப்பு திகதி : 2024.08.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 61,502,830.40
ADA KOTIPATHI
13 46 71 76 I
176287
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எப்...

மக்களுக்கு பொய் சொல்வதை நிறுத்திவிட்டு, சர்வதேச நாணய நிதியத்துடன் இணையவழி முறையில் பகிரங்க கலந்துரையாடல் ஒன்றுக்கு வருமாறு, சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்கு சவால் விடுகிறேன்.

இதன் மூலம் அவர்கள் மேடைகளில் சொல்லும் விடயங்களின் உண்மைத் தன்மையை முழு நாட்டு மக்களும் கண்டுகொள்ள முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி விசேட சம்மேளனக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (25) கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,நாடு வீழ்ச்சியடைந்திருந்த போது யாரும் முன்வராத காரணத்தினாலே நான் முன்வந்தேன். இலங்கை இல்லாமல் போனால் ஐக்கிய தேசிய கட்சியும் இல்லாமல்போகிறது. ஐக்கிய தேசிய கட்சியை நிர்மாணித்த டீ.எஸ். சேனாநாயக்க எமக்கு கற்றுத்தந்த விடயங்களின் அடிப்படையிலேயே நாடு இல்லாமல் போகும் நிலையில் நாட்டை பாதுகாத்து கட்சியை பாதுகாக்க முன்வந்தேன். இந்த விடயங்கள் எம்மில் இருந்து சென்றவர்களுக்கு தெரியாது. அவர்களுக்கு கட்சியின் வரலாறு தெரியாது.

எதிர்வரும் தேர்தல் தீர்மானமிக்க தேர்தலாகும். இதில் நான் வெற்றிபெற வேண்டுமா? இல்லையா? என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள். நான் வெற்றி பெற வேண்டும் என்றால், வீடு வீடாகச் சென்று மக்களுக்கு உண்மை நிலையை தெளிவுபடுத்த ஆரம்பிக்க வேண்டும். அன்று நாடு வீழ்ச்சியடையும் போது பலரும் எம்முடன் இணைந்து கொண்டு நாட்டை கட்டியெழுப்ப முன்வந்தனர். ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியும் மக்கள் விடுதலை முன்னணியும் நாட்டுக்கு அநீதி செய்தன. அவர்கள் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளவே முயற்சித்தனர்.

ரணசிங்க பிரேமதாசவுக்கு எதிராகக் குற்றப்பிரேரணை கொண்டுவந்த போதும் நானே அவரை பாதுகாத்தேன். அதேபோன்று அவர் கொலை செய்யப்பட்டபோதும் நானே அந்த இடத்துக்கு முதலில் சென்றேன். இதனை அவர்கள் மறந்துள்ளார்கள். அவர்கள் ஓடியதாலேயே நான் நாட்டைப் பொறுப்பேற்றேன். நாங்கள் ஒரு அணியாகச் செயற்பட்டு நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தோம். இந்த அணி உலக நாடுகளுடனும் சர்வதேச நாணய நிதியத்துடனும் கலந்துரையாடி உதவிகளைப் பெற்றுக்கொண்டு, இந்த நிலைக்கு நாட்டைக் கொண்டு வந்தோம்.

அதிகாரத்துக்கு வந்தால் வரியை குறைப்பதாக சஜித் பிரேமதாஸவும் அநுரகுமாரவும் தெரிவிக்கிறார்கள். அவர்கள் இதனை எவ்வாறு செய்யப் போகிறார்கள் என்பதை முதலில் தெரிவிக்க வேண்டும். வரியை குறைத்ததாலேயே நாடு வீழ்ச்சியடைந்தது என்பதை மக்கள் மறந்துவிடக்கூடாது.

அதனால் இரவில் விழுந்த குழியில் பகலில் விழ வேண்டுமா? எனக் கேட்கிறேன். நாணய நிதியத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை திருத்துவதாக தெரிவிக்கின்றனர். இரண்டு தரப்பினருடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தை இலகுவில் மாற்ற முடியாது. அவ்வாறு செய்வதாக இருந்தால், 18 நாடுகளுடன் 3 அமைப்புகளுடன் கலந்துரையாட வேண்டும்.

நாணய நிதியத்தின் உதவியைக் பெற்றுக்கொள்ள எங்களுக்கு ஒரு வருடகாலம் சென்றது.

மேலும் நாணய நிதியத்தின் அதிகாரிகள் அடுத்த வருட ஆரம்பத்தில் இலங்கை வர இருக்கின்றனர். எமது முன்னேற்ற நடவடிக்கை தொடர்பில் இதன்போது அவர்கள் ஆராய்வார்கள். நாங்கள் இந்தத் தேர்தலில் வெற்றிபெற்றால் தொடர்ந்து நாணய நிதியத்தின் நிபந்தனைகளுடன் முன்னுக்குச் செல்ல தயார் என தெரிவிப்போம்.

ஆனால் சஜித், அநுர என்ன சொல்லப் போகிறார்கள். நிபந்தனைகளைத் திருத்தியமைப்பதாக இருந்தால் ஒரு மாத காலம் செல்லும் தற்போது நாணய நிதியம் எமக்கு வழங்கி இருக்கும் நிதி ஜனவரி வரைக்கும் போதும், அதன் பின்னர் நிபந்தனைகளை மாற்றியமைக்கும்வரை நாணய நிதியத்தின் 700 பில்லியன் டொலர் நிறுத்தப்படும். அப்படியானால் நாட்டைக் கொண்டு செல்ல இவர்கள் பணம் எவ்வாறு பெற்றுக்கொள்ளப்போகிறார்கள்.

அதனால் அவர்கள் நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மாற்றியமைப்பதாகத் தெரிவிப்பது மக்களை ஏமாற்றும் செயலாகும். அதனால் இனியும் மக்களுக்குப் பொய் சொல்வதை நிறுத்திவிட்டு, சர்வதேச நாணய நிதியத்துடன் இணையவழி முறையில் பகிரங்கக் கலந்துரையாடல் ஒன்றுக்கு வருமாறு, சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்கு சவால் விடுகிறேன். இதன் மூலம் அவர்கள் மேடைகளில் சொல்லும் விடயங்களின் உண்மைத் தன்மையை முழு நாட்டு மக்களும் கண்டுகொள்ள முடியும் என்றார்.(ந-7)


## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 180 நிலப்பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புகள் சூழ உள்ள பகுதி
- நுச்சியம்பதி பிள்ளையார் கோவில் அருகாமையில்
- வட்டுக்கோட்டை Jaffna கல்லூரி 1 Km தூரம்
- காரைநகர் - யாழ்ப்பாணம் பிரதான காபெற் வீதி 500m தூரம், 784 வழி அரச, தனியார் பேருந்துகள் செல்லும் வழி
- 1 பரப்பின் விலை 150,000/= (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்)

(1789)

**077 294 1521**
**077 288 0152**
**076 755 8606**

## Home Based medical Care

உங்கள் வீட்டிலேயே மருத்துவ சிகிச்சையை பெற்றுக் கொள்ள அழையுங்கள்

**077 495 5606**



(284)

Be treated at your home

For More Details whatsapp

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலரும் விண்ணப்பிக்கலாம்)



CIMS College
49A, Chapel Street,Jaffna.
(C-1048)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## V2 VISA SERVICES
### கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்திய Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1048)

## கூறுவிலை மனுக்கோரல்

மேற்படி வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் பின்வரும் வேலைகளுக்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

1. ஆலயத்தின் பிளேட்டிற்கு மேலாக கூரை வேலை. (30000 சதுரஅடி) (அமோனா சீட் போடுதல்)
2. ஆலய நிலத்திற்கான கருங்கல் பதித்தல். (25000 சதுரஅடி)
3. றெறாசோ போடுதல் (25000 சதுரஅடி)
4. பொம்மை போடுதல் (சிற்ப வேலைகள்)

- மேற்படி வேலைகளுக்கான தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
- விலைமனுவிற்கான படிவத்தினை ஆலய அலுவலகத்தில் 26.08.2024 இல் இருந்து தினமும் காலை 08.00 தொடக்கம் மாலை 05.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்களை 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(C-1049)

தொடர்புகளுக்கு : 076 182 8750, 077 936 2643, 077 474 0571

வற்றாப்பளை கண்ணகி அம்மன், ஆலய பரிபாலன சபை, வற்றாப்பளை, முள்ளியவளை, முல்லைத்தீவு.

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (1749)

076 825 7716 (ஆகாஸ்)

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

1%

- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு:

(216)

075 033 6759

## விற்பனைக்கு

யாழ். நல்லூர்க் கோயிலுக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும், யாழ். நீதிமன்றத்துக்கு முன்பாக 2 பரப்பு, 3 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

(1788)

077 723 2535

## மொத்தக் கொள்வனவு

அங்கர் யோகட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்

வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்கு பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள்.

ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்

077 773 0900

(287)

## இந்தியன் விசா சேவைகள்

ஒரு வருட E-Visa இப்போது 9990/= ரூபாவிலிருந்து

யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்களை குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ் CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

(287)

## காணி விற்பனைக்கு

சேந்தான்குளம் இளவாலை வீதியில், சேந்தான்குளம் சந்தியில் இருந்து 200m தூரத்திலும், பிரதான வீதியில் இருந்து 150m தூரத்திலும்,

- 18 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
- தரகர் தேவையில்லை.
- ஒரு பரப்பின் விலை :- 600,000/-

(1764)

077 368 4579, 077 148 9278


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.